ஜனவரி 2005

www.padippakam.com

ரூ. 5.00

# புதிய ஜனநாயகம்






## பரவுகிறது இராணுவ ஆதிக்கம் —இந்தியாவில்தான்!

படிப்பகம்

www.padippakam.com

## தேசிய ஊரக வேலை உத்திரவாத சட்டம்:

# காங்கிரசின் துரோகம் போலிகளின் புலம்பல்

கிராமப்புற விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு குறைந்தபட்சம் 100 நாட்கள் வேலை தரப்போவதாக வாக்களித்த காங்கிரசு கூட்டணி ஆட்சியாளர்கள், இப்போது அதைக் காற்றிலே பறக்கவிட்டு அத்திட்டத்துக்கே குழிபறிக்கக் கிளம்பி விட்டார்கள். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் குறைந்தபட்ச பொதுத்திட்டத்தின் ஓர் அங்கமான கிராமப்புற வேலை உத்திரவாதத் திட்டத்தைச் செயல்படுத்த, ''தேசிய ஊரக வேலை உத்திரவாத சட்டம், 2004'' என்ற புதிய மசோதாவை ஆட்சியாளர்கள் தயாரித்துள்ளனர். இம்மசோதா, வேலை உத்திரவாதத்தை ஒவ்வொரு மட்டத்திலும் கீழறுத்து, இத்திட்டத்தையே நீர்த்துப் போகச் செய்யுமாறு உருவாக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற விவசாயக் குடும்பங்களுக்கு ஆண்டுக்கு 100 நாட்களுக்கு வேலை தருவதாக ஆரவாரம் செய்த இத்திட்டம், வறுமையிலுள்ள விவசாயக் குடும்பத்திலுள்ள ஒருவருக்கு மட்டுமே வேலை தரப்படும் என்பதாக இப்போது சுருக்கப்பட்டுள்ளது. அனைத்து விவசாயக் குடும்பங்கள் என்பதற்குப் பதிலாக 'வறுமையிலுள்ள' விவசாயக் குடும்பங்கள் என்ற புதிய விதியைத் திணித்துள்ளது. எதை வைத்து வறுமையில் உள்ளதாகத் தீர்மானிப்பது என்பதற்கு எந்த வரையறையும் இதில் அறிவிக்கப்படவில்லை.

நாடு முழுவதும் அனைத்து கிராமங்களிலும் ஐந்தாண்டுகளுக்கு வேலை உத்திரவாதத் திட்டத்தைச் செயல்படுத்தப் போவதாக அறிவித்த காங்கிரசு ஆட்சியாளர்கள், இப்போது இத்திட்டத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட பின்தங்கிய சில பகுதிகளில், குறிப்பிட்ட சில நாட்களுக்குச் செயல்படுத்தப் போவதாகக் கூறுகின்றனர். இதிலும் பின்தங்கிய பகுதி எது என்பதற்கு எந்த வரையறையும் இல்லை.

அடுத்து, இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளில் குறைந்தபட்ச ஊதியமாக ரூ. 66.00 வழங்கப்பட மாட்டாது. வேறுபட்ட பகுதிகளில், வேறுபட்ட ஊதியம் வழங்கப்படும்; மைய அரசுதான் ஊதியம் பற்றி முடிவு செய்யும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது மைய அரசின் திட்டமாக இருந்தாலும் மாநில அரசுகள் இத்திட்டத்தைத் தமது பகுதிகளில் செயல்படுத்த மொத்த செலவில் மூன்றில் ஒரு பங்கை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்கிறது இம்மசோதா. ஏற்கெனவே நிதிப் பற்றாக்குறை என்று கையை விரிக்கும் மாநில அரசுகளால், இத்திட்டத்துக்கு மூன்றில் ஒரு பங்கு நிதியைச் செலுத்த இயலாமல் போகும். அதையே காரணம் காட்டி, மைய அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்தாமல் முடக்கி விடலாம்.

வேலை உத்திரவாதத் திட்டம் செயல்படுத்தப் படாத பகுதிகளில், வேலையில்லா கிராமப்புற மக்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்களுக்கு மட்டும் நிவாரணம் தரப்படும் என்று இம்மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அனைவருக்கும் வேலை என்பது போய், குடும்பத்துக்கு ஒருவருக்கு மட்டும் வேலை என்று சுருங்கி, திட்டம் செயல்படுத்தப்படாத பகுதிகளில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ளவர்களுக்கு மட்டும் என்பதாக மேலும் சுருக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டுக்கு மேலே உள்ளவர்களுக்கு அரசாங்கம் வேலை கொடுக்காவிடில் என்ன நடவடிக்கை என்பதைப் பற்றி இம்மசோதா மவுனம் சாதிக்கிறது.

மேலும், மொத்தத்தில் பெண்களுக்கு 40% வேலை வாய்ப்பு தரவேண்டும் என்ற அடிப்படை விதி, இம்மசோதாவில் புறக்கணிக்கப்பட்டுள்ளது. தனிச்சிறப்பான - கடினமான வேலைகள் என்று காரணம் காட்டி பெண்களுக்கான வேலை வாய்ப்பைத் தட்டிப் பறித்துவிட்டு, விருப்பப்பட்டவர்கள் இவ்வேலைகளைச் செய்யலாம் என்கிறது. வறுமையிலும் சத்துணவின்றியும் உள்ள பெண்களால், விருப்பப்பட்டாலும் இத்தகைய கடினமான வேலைகளைச் செய்ய முடியாமல் போய், அவர்களுக்கான வேலை வாய்ப்பே முடக்கப்பட்டு விடும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, விவசாயம் சார்ந்த - உற்பத்தியோடு தொடர்புடைய வேலைகள் இம்மசோதாவில் அறவே புறக்கணிக்கப்பட்டுள்ளன. மழைநீர் சேகரிப்பு, நுண்பாசன முறை, வெள்ளத்தடுப்பு, திசு வளர்ச்சி, மலர்ப் பண்ணை, தரிசு நில மேம்பாடு முதலானவற்றுக்கான வேலைகளே ஒதுக்கப்படவுள்ளன. இவை தொடர்ச்சியாக விவசாய உற்பத்தியையும் வேலை வாய்ப்பையும் பெருகச் செய்யாது. ஒரு சுற்று முடிந்ததும் வேலையே இல்லை என்பதாகி விடும்.

''எங்கள் தயவில்தான் காங்கிரசு கூட்டணி ஆட்சி அமைந்துள்ளது; குறைந்தபட்ச பொதுத்திட்டத்தை நாங்கள்தான் உருவாக்கினோம்; கேழ்வரகில் நெய் வடிகிறது; நம்புங்கள்!'' என்று ஆரவாரம் செய்து காங்கிரசுக்கு வால்பிடித்துச் செல்லும் போலி கம்யூனிஸ்டுகள், ''ஐயோ, இப்படி மோசடி செய்து விட்டார்களே!'' என்று கீறல் விழுந்த இசைத்தட்டாக மீண்டும் பிலாக்கணம் பாட ஆரம்பித்து விட்டார்கள்.

● குமார்

அரைகுறைப் பட்டினியால் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் குழந்தைகளோடு ஆந்திராவின் சுவப்பள்ளி கிராமத்தில் பரிதவிக்கும் சந்திரம்மா: வேலையே இல்லாதபொழுது சத்தான உணவிற்கு எங்கே போக முடியும்?





படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

தொகுதி: 20

இதழ் 3

ஜனவரி 2005

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 10

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை-600 024.

# பேரலைகள் - பேரழிவுகள் இறந்தவர்களுக்கான ஒப்பாரியில் எஞ்சியவர்களின் துயரங்கள் மூழ்கடிக்கப்படுவதா?

நெஞ்சை அறுக்கும் காட்சிகள். துயரமானவை, கோரமானவை, அவலமானவை - இப்படி எந்தச் சொல்லாலும் எடுத்துச் சொல்ல முடியாத காட்சிகள். குவியல், குவியலாகப் பிணங்கள். பெரும்பாலும் பெண்கள், சிறார்கள், முதியோர்கள். சீறிப் பாய்ந்த கடலலையின் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் பலியாகிப் போனவர்கள். இறந்தோரின் உடல்களைத் தோள்களிலே சுமந்து கொண்டு, கைகளிலேந்திக் கொண்டு கதறியவாறே சேற்றிலே ஓடுகிறார்கள் உறவினர்கள். கதிரடிக்கப்பட்ட தாள்களைப் போல, அடித்துத் துவைத்த துணியைப் போல குப்பை வண்டிகளில் உடல்கள் வீசியெறியப்படுகின்றன. வரிசையாகக் கிடத்தப்பட்ட உடல்களில் உற்றார் உறவினரை அடையாளம் கண்டு கொள்ள கண்ணீரும் கம்பலையுமாகப் புரட்டிப் புரட்டிப் பார்க்கிறார்கள். இறந்த பிஞ்சுக் குழந்தைகளை மடியிலே கிடத்திக் கொண்டு ஓலமிடுகிறார்கள், ஒப்பாரிக் குரலெழுப்புகிறார்கள் பெண்கள். சாலைகளிலே விசிறியடிக்கப்பட்ட சடலங்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன. பெரிய பெரிய மண்வாரி இயந்திரங்களைக் கொண்டு குழிவெட்டி, பிணங்களைத் தள்ளி மூடும்போதே தமது உறவினரைத் தேடிக் குழிக்குள், சேறு சகதிக்குள் இறங்கி கதறுகிறார்கள். பல ஆயிரக்கணக் கானோர் இன்னும் எவ்வளவு பேர் சேற்றுக்குள் புதைந்து கிடக்கிறார்கள். எவ்வளவு பேரைக் கடல் இழுத்துக் கொண்டு போயிருக்கிறது. யாருக்கும் எப்போதும் தெரியாது.

இறந்தோரை, காணாமல் போனோரைக் கணக்கெடுப்பதற்குக் கூட வழியில்லை. பல ஆயிரக்கணக்கான வீடுகள் - இல்லை குடிசைகள், குப்பங்கள் இருந்த இடங்களே தெரியாமல் அழிந்து போய் விட்டன. வங்கக் கடலில் இருந்த பல தீவுகளைப் போலவே, பல நூறு குப்பங்கள் - கிராமங்கள் காணாமல் போய்விட்டன. தென்னிந்தியாவின் கிழக்குக் கடற்கரை நெடுகிலும், குறைந்தது கரையில் இருந்து ஒரு மைல் தூரத்துக்கு மக்கள் வாழ்ந்ததற்கான அடையாளமே தெரியாத மண்மேடாகி, பொட்டல் காடாகிப் போனது. தெற்கு ஆசியா மற்றும் தென்கிழக்காசியாவில் இந்துமாக்கடலை ஒட்டிய நாடுகளிலெல்லாம் இந்தப் பேரழிவுகள் நிகழ்ந்துள்ளன. பாதிப்படைந்தவர்களில் மிகப் பெரும்பான்மையினர் கடலை நம்பி, கடற்புறத்தில் வாழும் ஏழை எளிய மீனவ சமுதாயத்தினர்.

சுமத்திரா தீவுக்கு அருகே கடற்பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டு, உருவாகிய "சுனாமி" எனப்படும் பேரலைகள் தாம் இந்தப் பேரழிவுகளுக்குக் காரணம் என்றாலும், இவை இயற்கையின் சீற்றத்தால் நேர்ந்துவிட்டன என்று சமாதானப்படுத்திக் கொள்ள முடியாது. இப்பேரழிவுகளைத் தவிர்த்திருக்க முடியாதா, குறைத்திருக்க முடியாதா என்ற கேள்விகள் எந்த விளக்கத்தாலும் ஒதுக்கித் தள்ளிவிட முடியாதவை. குமரிக் கண்டத்தைத் தாக்கிய கடல் கோள் நிகழ்ந்த காலத்தில் தான் அறிவியல் வளர்ந்திருக்கவில்லை. அறிவியல் வசதிகள் மிகுந்த இந்த நூற்றாண்டில் இந்தக் கடல் கொந்தளிப்பால் நிகழ்ந்த பேரழிவுகள் தவிர்த்திருக்கக் கூடியவைதாம். தமிழகக் கடற்கரையில் இருந்து 2000 மைல்களுக்கு அப்பால் நடந்த நிலநடுக்கம் காரணமாக உருவான சுனாமி பேரலைகள் மணிக்கு 500 மைல் வேகத்தில் பாய்ந்து வந்தன. அலைகள் தோன்றி தமிழகக் கரையை அடைவதற்கு இரண்டரை மணிநேரம் பிடித்திருக்கிறது. இந்தப் பகுதி சுனாமி அலை வருவதற்கான வாய்ப்பு இல்லாத பகுதி. இதை முன் கூட்டி அறிந்து எச்சரிக்கும் ஏற்பாடுகள் இங்கே கிடையாது, பசிபிக் மாக்கடலை ஒட்டிய நாடுகள் மட்டுமே சுனாமி அலைகள் வருவதை அறிந்து எச்சரிக்கும் அமைப்பைக் கொண்டிருக்கின்றன. இனிமேல்தான் இந்தியா அந்த அமைப்பில் சேரும் என்று கூறுகிறார்கள். கடலில் நிலநடுக்கம் ஏற்பட்டால், சுனாமி அலைகள் உருவாகி பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பது தெரியாததில்லை. கடலுக்கடியில் இவ்வளவு ஆழத்தில் இவ்வளவு தூரத்தில் இந்த வகை மீன் கூட்டம் நடமாடுவதை விண்கோளில் இருந்து தெரிந்து தினமும் தகவல் சொல்லும் காலமிது. கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக பேரழிவுகளை விளைவிக்கும் சுனாமி பேரலைகள் உருவாகி, கரைகளை நோக்கிச் சீறிப்பாய்ந்து வருகின்றதென்று அமெரிக்கா முன்கூட்டியே அறிந்து, ஆஸ்திரேலிய நாட்டை எச்சரித்திருக்கிறது. சி.ஐ.ஏ.வின் உளவு செய்திகளைக் கூட இந்தியாவுடன் பகிர்ந்து கொள்ளும் அமெரிக்கா, இந்தச் சுனாமி பேரலைகள் இந்தியா, இலங்கைக் கரைகளை நோக்கிப் பாய்ந்து வருகின்றன என்று எச்சரிக்கவே இல்லை! என்னவொரு நயவஞ்சகம்!

சுனாமி பேரலைகளால் நிகழ்ந்த பேரழிவுகள் ஒரு சில நிமிடங்களே நீடித்தவை என்றாலும் அதன் பிறகு ஆட்சியாளர்களின் கிரிமினல் புறக்கணிப்பு காரணமாக

தொடர்ச்சி 17-ஆம் பக்கம்

www.padippakam.com

# சங்கர மடத்தின் புதிய கைக்கூலிகள்

**ஜெ**யேந்திரனைக் கைது செய்து வெற்றிகரமாக 50 நாட்கள் கடந்துவிட்டன!

ஏடறிந்த காலம் முதல் அடுத்தவன் குடியைக் கெடுத்து வரும் பார்ப்பன பயங்கரவாதிகள், முதல்முறையாக 'தங்கள் குடி கெட்டுவிடுமோ' என்று அச்சத்தில் அலறுகிறார்கள்! ஆத்திரமும் வக்கிரமும் தலைக்கேறி, தண்டத்தையே உருட்டுக் கட்டையாக்கி, பூணூலையே சைக்கிள் செயினாக்கி, நாடு முழுக்க ''உதார்'' விடுகிறார்கள்.

தனது வாசகனை நடிகை சொர்ண மால்யாவின் இடுப்பு மடிப்புவரை அழைத்துச் செல்லும் பார்ப்பன ஊடகங்களோ, ஜெயேந்திரனின் கைதுக்கு முன்னும் பின்னும் சங்கரமடம் என்ற அலிபாபா குகைக்குள்ளே என்ன நடந்தது, நடக்கிறது என்று சொல்ல மறுக்கின்றன.

மட பீடத்தின் தலைவனான ஜெயேந்திரனின் ரத்தவெறிக்கும், ஸ்ரீ லீலைகளுக்கும் பின்னால் மறைந்திருக்கும் பண முதலைகள், முதலாளிகளின் தொடர்புகளை ஆய்வு செய்ய மறுக்கின்றன.

ஜெயேந்திரன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கான ஆதாரங்களை ஆராய்வதை விட்டு விட்டு, குற்றம் சாட்டுபவர்களின் பஞ்சாங்கங்களைத் தேடித் துருவி வெளியிடுகின்றன. ''நீ யோக்கியமா?'' என்று எதிர்வாதங்களை அடுக்கி, ஜெயேந்திரனின் கொலைக் குற்றத்தை விசாரணை இன்றி மூடி விடத் துடிக்கின்றன.

தொடர்ந்து பார்ப்பன பயங்கரவாதிகளும் பார்ப்பன ஊடகங்களும் என்ன சொல்கின்றன? கிரிமினல்கள் போலீசிடம் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் ஜெயேந்திரரைக் கைது செய்துவிட்டு, இப்போது போலீசு அவசரமாக கீழ்த்தரமான ஆதாரங்களைச் சேர்க்கிறது' என்ற பிரச்சார போரை நடத்துகின்றன.

இந்த பிரச்சார போரில் முதலில் ஆயுதங்களை போட்டுவிட்டு ஓடுவது யார்? உண்மைகளைக் கண்டு பிடிக்க வேண்டிய நீதிபதிகளும் போலீசும் தான்!

ஜெயேந்திரனின் ஜாமீன் மனுவை விசாரித்த நீதிபதி, ''நீதிபதிகளின் குடியிருப்பில் இடம் காலியாகத்தான் இருக்கிறது. சங்கராச்சாரியை இங்கேயே வைத்து விசாரிக்கலாமே'' என்று உளறுகிறாரே, ஏன்? தங்களுடைய அதிகாரத்தைப் பயன்படுத்தி சலுகை காட்ட நீதிபதிகள் முயலுகிறார்களே, ஏன்? டில்லி உச்சநீதி மன்ற நீதிபதியோ, ஒருபடி மேலே சென்று ''10 நாட்களுக்கு முன்பே ஏன் ஜாமீன் மனு போடவில்லை!'' என்று உருகுவது ஏன்?

தமிழக போலீசோ, விசாரணை என்ற பெயரில், ஜெயேந்திரனிடம் 'சாமீ! சாமீ!' என்று கொஞ்சுகிறது! கெஞ்சுகிறது! அவர் எப்போது வாயைத் திறப்பார் என்று காலடியில் தவம் இருக்கிறது! அவர் கொட்டாவி விடும் போது வாயைத் திறந்தால்தான் உண்டு.

போலீசு அவரை 'கிச்சுகிச்சு' மூட்டிக் கூட உண்மையை வாங்க முடியாது! 'மனுதர்ம உரிமை மீறல்; சூத்திரன் தொட்டு விட்டான்!' என்று முக்கோடி தேவர்களும் போலீசுக்கு நோட்டீசு அனுப்புவார்கள்!

இதை ஏதோ நாம் விளையாட்டுக்குச் சொல்லவில்லை! உண்மை இதுதான்! தொழுவத்தில் மாடு மாதிரி படுத்துக் கொண்டு விசாரணை குற்றவாளி பதில் சொல்லியதை உலக சரித்திரத்தில் உதாரணம் காட்ட முடியுமா? ஜெயேந்திரனிடம் விசாரணை அப்படித்தான் நடந்தது!

இது மட்டுமா? ஜெயேந்திரனின் கைதுக்குப் பிறகு வேலூர் சிறை இப்போது, 6-வது சங்கரமட பீடம் போல காட்சியளிக்கிறது!

காஞ்சி சங்கரமடத்தில் நடந்த திரை மறைவு சதிகள், இப்போது வேலூர் சிறையில் பகிரங்கமாக, போலீசின் கண் முன்னாலேயே நடக்கின்றன! ஜார்ஜ் பெர்னாண்டஸ் முதல் சுஷ்மா சுவராஜ் வரை பார்ப்பன அரசியல் தரகர்களும், அசோக் சிங்கால் முதல் உமாபாரதி வரை பார்ப்பன பயங்கரவாதிகளும்,

**ஜெயேந்திரன் போலீசிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தபொழுது பதிவு செய்யப்பட்ட வீடியோ காட்சி (பட உதவி: நக்கீரன்) தொழுவத்தில் மாடு மாதிரி படுத்துக் கொண்டு விசாரணை குற்றவாளி பதில் சொல்லுவதை உலக சரித்திரத்தில் உதாரணம் காட்ட முடியுமா?**





படிப்பகம்

www.padippakam.com





**வேலூர் சிறைக்கு வெளியே கற்பூரம் ஏற்றி கந்தர் சஷ்டிக் கவசம் பாடும் இராம. கோபாலன் (இடது); ஜெயேந்திரனிடமிருந்து பிரசாதங்களை வாங்கிக் கொண்டு சிறையில் இருந்து வெளியே வரும் வக்கீல் கிருஷ்ணசாமி: சிறையா? சங்கர மடமா?**

சுந்தரேச ஐயர் போன்ற சங்கர மடத்தின் 'கார்ப்பரேட்' நிர்வாகிகளும், சசிகலா நடராஜன் முதல் சங்கர நேத்ராலயா மருத்துவமனையின் முதலாளி மருத்துவர் பத்ரிநாத் வரை சமூகத்தின் முக்கிய புள்ளிகளும், உடன்பிறந்த தம்பி விஸ்வநாதன் முதல் பேரன் - பிள்ளைகள் வரை ரத்த சொந்தங்களும் வேலூர் சிறைக்குள்ளேயே தினமும் ஜெயேந்திரன் தலைமையில் கூட்டம் நடத்துகிறார்கள்.

இது மட்டுமா? ஜெயேந்திரனுக்கு பார்ப்பன கைதி சமைத்துப் போடும் தனி சாப்பாடு; உடல் வலிமைக்கு காலையில் நடைபயிற்சி! பழரசம்! உளவலிமைக்கு தியானம்! பூஜை! உலக நடப்பை அறிந்து கொள்ள தினசரி பத்திரிகைகள்; உடல் நலத்திற்கு சிறப்பு மருத்துவர்கள், மருந்துகள்... இப்படி பல வசதிகள்;

நீதிமன்றக் காவலில் ஜெயேந்திரர் ஆரோக்கியமாக இருப்பதை அவருடைய ''எடை பில்''லோடு நிரூபித்த பிறகும், பார்ப்பன பயங்கரவாதிகளும் பார்ப்பன ஊடகங்களும் ''ஜெயேந்திரர் மனரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்'' என்று குதிக்கின்றனர்.

அப்படியானால், ஜெயேந்திரரின் மனம் சாந்தி அடைய என்னதான் வழி? 'ஹார்லிக்ஸ் சியாமளாவையும் சிறீரங்கம் உஷாவையும் வேலூர் சிறைக்குள் அனுப்புவதுதான் ஒரே வழி' என்று நீதிமன்றத்தில் மனு போடலாமே! யார் தடுத்தது?

'ஜெயேந்திரரை விசாரிக்கவே கூடாது, அவர் 'ஜெகத்குரு'! சாதாரண சட்டம் எல்லாம் அவரைக் கட்டுப்படுத்தாது! அவர் சட்டத்திற்கு மேலானவர்!' என்று கஞ்சா சாமியார்கள் தலைமையில் பார்ப்பன பயங்கரவாத பி.ஜே.பி. கும்பல் ஊளையிடுகிறது!

''வழக்கு பொய்'', ''சாட்சிகள் பொய்'', என்று திமிரோடு தீர்ப்பு எழுதுகின்றன, பார்ப்பன ஊடகங்கள்! ''சாட்சிகள் பல்டி'', ''போலீசு திணறல்'', ''நீதிமன்றம் குழப்பம்'' என்று பலமுனைப் பிரச்சார யுத்தத்தை நடத்துகின்றனர்.

சோ, குருமூர்த்தி போன்ற பார்ப்பன அதிகாரத் தரகர்கள், ''அறிவாளிகள்'' என்ற மிதப்பில் பத்திரிகைகளில் சரஞ்சரமாகக் கட்டுரைகள் எழுதுகின்றனர். 'ஜெயேந்திரர் மனரீதியாக மிரட்டப்படுகிறார், மனித உரிமை மீறப்படுகிறது. எனவே, வழக்கை வேறு மாநிலத்திற்கு மாற்ற வேண்டும்' என்று சாதிக் கொழுப்பெடுத்து எழுதுகின்றனர். கொலைக் குற்றவாளி ஜெயேந்திரனை இன்னமும் கடவுளாகப் பூச்சாண்டி காட்டுகின்றனர்.

முதலில் பார்ப்பன பயங்கரவாதிகள்; இரண்டாவது, பார்ப்பன ஊடகங்கள்; மூன்றாவது சேனையாக, 'மதச்சார்பற்ற' முற்போக்கு அறிவு ஜீவிகளும் சங்கரமடத்தைக் காப்பாற்றும் அவசரப் பணியில் ஈடுபட்டுள்ளனர். சொற்ப சேதாரங்களோடு ஒடுக்குத்தட்டி 'ஒழுங்கு'படுத்தும் வேலைகளில் முழு மூச்சாக இறங்கியுள்ளனர்!

மதச்சார்பற்ற கும்பல்களின் அறிவு ஜீவியான என்.ராம் ஆசிரியராக இருக்கும் இந்து ஏடு, மகாப் பெரியவர் (சந்திரசேகரன்) கவனம் செலுத்திய வைதீக - சனாதன இந்து தர்மத்தை அழியாமல் பாதுகாக்கும் பணியை மட்டும் பார்ப்பதுதான் மடத்தின் வேலை. பள்ளிகள், மருத்துவமனைகள் என்று இலாபகரமான முதலாளித்துவ தொழில்களிலும் காலூன்றினால், 'கார்ப்பரேட்' நிறுவ

## ''பெரியாறு அணை நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்து!''
## - வி.வி.மு. ஆர்ப்பாட்டம்

முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 152 அடியாக உயர்த்த வேண்டும்; விளைந்த நெல் கொள்முதலை அரசே செய்ய வேண்டும்; பெரியாறு - வைகை தண்ணீரை கடைப்பத்து கண்மாய்களில் நிரப்ப வேண்டும்; திருமங்கலம் பிரதானக் கால்வாயை ஆழப்படுத்த வேண்டும்; நடவு முடியும்வரை, முறை வைக்காமல் நீர் வழங்க வேண்டும்; விவசாயிகளுக்கு நிபந்தனையின்றிக் கடன் வழங்கப்பட வேண்டும்; பழைய கடன்கள் ரத்து செய்யப்பட வேண்டும் - உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி உசிலை, திருமங்கலம் வட்ட வி.வி.மு. 10.12.04 அன்று செல்லம்பட்டி யூனியன் அலுவலகம் முன்பாகவும், 14.12.04 அன்று திருமங்கலம் தேவர் திடலிலும் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

ஆர்ப்பாட்டத்துக்கு முன் இதன் அவசியத்தை விளக்கி இவ்வட்டார கிராமங்கள்தோறும் விரிவாக பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டதால், திரளாக விவசாயிகள் இந்த ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்று ஆதரவளித்தனர். எந்த ஓட்டுக் கட்சியும் விவசாயிகளை ஏறெடுத்தும் பார்க்காத நிலையில், விவசாயிகளிடம் இந்தப் பிரச்சாரமும் ஆர்ப்பாட்டமும் புதிய நம்பிக்கையை விதைத்துள்ளது.

**- விவசாயிகள் விடுதலை முன்னணி, உசிலை, திருமங்கலம் வட்டம்.**


படிப்பகம்

www.padippakam.com

னம் போன்று நிர்வகிக்கத் தெரிந்துக் கொள்ளுங்கள்; இரண்டையும் கலந்தால், குழப்பம்தான் மிஞ்சும்! தற்போது அதுதான் நடந்துள்ளது, 'உஷார்' என்று எச்சரிக்கிறது.

மடத்தில் நடந்த 'விபத்தை' சரி செய்ய, 'நொறுங்கி'ப்போன ஜெயேந்திரனை ஓரங்கட்டிவிட்டு, இளையவன் விஜயேந்திரனை 'ஓட்டுநர்' சீட்டில் உட்கார வைக்கும் வேலையில் முழு மூச்சாக இறங்கிவிட்டார் 'இந்து' ராம்! இதற்காக, அவசர அவசரமாக ஆந்திரா சென்று இளையவன் விஜயேந்திரனைத் தனது காரில் அழைத்து வந்தார். 'ஜெகத் குரு' வின் வாரிசுகள் மடத்தைக் கைப்பற்றிக் கொட்டமடிப்பதுப் பற்றியோ, வைதீக பார்ப்பனரையே 'போட்டுத் தள்ளும்' அளவுக்குச் சீரழிந்துள்ள மடத்தின் உள் விவகாரங்களையோ, 'போஃபர்ஸ்' ஆய்வு மாதிரி மூக்கைத் துணிச்சலாக நுழைக்கவில்லை. மாறாக, மடத்தின் மீது கெட்டியாக படிந்துவிட்ட ஆர்.எஸ்.எஸ். சாயத்தை சுரண்டி, புதிய 'மதச்சார்பற்ற' வண்ணம் அடிக்கும் வேலையில் மூழ்கி விட்டார், இந்து ராம்!

கம்யூனிசம் என்பதே 'குறைபிரசவ' சித்தாந்தம் என்று பிரச்சாரம் செய்யும் காலச்சுவடு, 'சங்கரமடம் அழியாமல் தப்பிப்பதற்கு' குறுகிய கால, சுகப்பிரசவத்தில் ஒரு தெய்வீக ஸ்மிருதியை ஈன்று இருக்கிறது. ''சாதி அமைப்பு மற்றும் பெண்கள் குறித்த பார்வை ஆகிய வற்றை மறுபரிசீலனை செய்து காலத்திற்கேற்ப (இவ்வளவு நாள் பின்பற்றியது சரி! இனிமேலாவது!) தன்னைப் புதுப்பித்துக் கொள்ளவும் அவர்கள் தயாராக வேண்டும். செய்யத் தவறினால், இது போன்ற மடங்கள் விரைவில் அருங்காட்சியகத்தின் ஓர் அங்கமாக மாறுவதைத் தவிர்க்க முடியாது'' என்ற தனது 'கார்பரேட்' காவிகளுக்கு கவலையோடு, 'வாழும் கலை'யைப் போதிக்கிறது.

'ஜெயேந்திரர் வழக்கு செத்துவிட்டது' என்று எழுதிய ஆர்.எஸ்.எஸ். கைக்கூலி குருமூர்த்தியை அழைத்து, ''எப்படி வழக்கு செத்து விட்டது'' என்று விசாரித்தது போலீசு. வலது கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தலைவர் நல்லக்கண்ணு உடனே, கண் சிவக்கிறார். 'பத்திரிகை சுதந்திரத்துக்கு ஆபத்து' என்று கண்ணைக் கசக்குகிறார்.

இடது போலிகளோ, தங்களுடைய தத்துவார்த்த 'மார்க்சிஸ்ட்' மாத இதழில் (டிசம்பர்), ''மடங்களும் கிரிமினல்களும்'' என்ற தலைப்பில், ''இனி எந்த முகத்தை வைத்துக் கொண்டு கிரிமினல்மயமாகி வரும் அரசியல் பற்றி பிஜேபி பேசமுடியும்? அது மார்தட்டிக் கொண்டு பெருமைப்படும் இந்து மத நிறுவனங்கள் மிக அசிங்கமாக கிரிமினல்மயமாகிக் கிடப்பதற்கு திருப்திகரமான பதிலை மக்களுக்கு தரவேண்டி நிலைக்கு பி.ஜே.பி. தள்ளப்பட்டு விட்டது!'' என்று எதிரியின் அழுக்கைக் கொண்டு தன்னுடைய அழுக்கை ஆவேசமாகத் துடைத்துக் கொள்கிறது!

காங்கிரசு தலைமையில் டில்லி கூட்டணி ஆட்சியில் வீற்றிருக்கும் கிரிமினல் மந்திரிகளுக்கு தான் வக்காலத்து வாங்கிய கிரிமினல் குற்றத்தை வெட்கமே இல்லாமல் ஜெயேந்திரன் குற்றத்தோடு ஒப்பிட்டு, கணக்கை 'நேர்' செய்துக் கொள்கிறது! கிரிமினல் கூடாரமான நாடாளுமன்றத்தில் தாங்கள் புரளுவதை எந்த பரதேசியாலும் கேள்வி கேட்கவே முடியாது', என்று ஆர்ப்பரிக்கிறது; எங்கெங்கும் கிரிமினல்மயம் என்று, கலிகாலம் முற்றிவிட்டதாக வேதாந்தம் பேசுகிறது.

பிறகு, நெருக்கடியில் இருக்கும் பிஜேபியை அணைத்துக் கொண்டு ஆலோசனை சொல்கிறது: ''பி.ஜே.பி.க்கு உண்மையிலேயே இந்து மதத்தின் மீது நம்பிக்கையும் பற்றும் இருந்தால், அதனைக் காப்பாற்றவே அவதாரம் எடுத்திருப்பதாகக் கூறிக் கொள்வதில் சிரத்தை இருந்தால், கொலை வழக்கைச் சந்தித்து வரும் மடாதிபதியைச் சந்தித்து, அவரை மடாதிபதி பதவியிலிருந்து விலக வேண்டுமென்று நாலு சுவருக்குள்ளாவது பேசி, உண்மையிலேயே ஆன்மீகப் பற்றுள்ள மற்றொருவரை மடாதிபதியாக நியமித்திருக்க வேண்டியது தானே. சங்கரமட நம்பிக்கையுள்ள பல லட்சம் பக்தர்கள் இன்று விரக்தியில் உள்ளனர். அவர்களின் விரக்தியைப் போக்கி புதிய மடாதிபதியை நியமித்து நாசக் கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். விளையாடும் குழந்தையின் கையிலிருந்த பொம்மையைப் பிடுங்கிக் கொண்டு குழந்தையை அழ வைத்தது போலாகிவிட்டது. இன்னொரு பொம்மையை உடனடியாகத் தந்திருக்க வேண்டும். இந்த நாசக் கட்டுப்பாட்டு நடவடிக்கை எடுக்கப்படுவதைத் தடுக்கும் சக்திகளே, இந்து மதத்திற்கு கேடுகளை விளைவித்த சக்திகள். அது வேறுயாருமல்ல சங்பரிவாரமே!'' என்று நெருப்பு மிதித்து சத்தியம் செய்கிறது!

நாடாளுமன்றம் அம்பலப்பட்டு ஆபத்தில் சிக்கும் பொழுதெல்லாம், அதனைக் காப்பாற்ற முன்னணியில் இருக்கும் 'மார்க்சிஸ்டு'கள், இப்பொழுது அந்தத் திருப்பணியை சங்கர மடத்திற்கும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். ''ஜனநாயகத்(!) தன்மை இல்லாத ஒரு அமைப்பானது நெருக்கடிக்குள் சிக்கும்போது வெளிவர முடியாமல் எவ்வாறு திணறுகிறது என்பதையும் இக்கைதின் மூலம் பார்க்க முடிகிறது'' என்று இடியாப்ப சிக்கலை நினைத்து இடிந்து போகிறது! திடீரென சிக்கலை எளிதாக தீர்க்கிறது! 'நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு' என்ற சாக்கடை மூடியைப் போன்று, சங்கரமடத்திலும் ஒரு 'ஜனநாயக' மூடி போட்டு விட்டால் போதும்' என்கிறது. இதனால் 'சங்கரமடம் கிரிமினல் கூடாரமாகிப் போனாலும் வழிபாட்டு தலம் என்ற மகிமை மறையாது' என்று 'சூப்பர் ஐடியா' கொடுக்கிறது.

பார்ப்பன பயங்கரவாதிகள் இனி, சூலாயுதத்தையும் வேலாயுதத்தையும் தூக்கிக் கடாசிவிட்டு, சுத்தி அரிவாளை மாலையாகப் போட்டுக் கொண்டு, கம்யூனிசப் போலிகளை வணங்கி, வலம் வரும்நாள் வெகு தொலைவில் இல்லை!

சொந்த மக்களின் பிறப்பிலேயே இழிவைத் திணிக்கும் சனாதன வைதீக பார்ப்பனியமான இந்துமதம், தானே தோலுரித்துக் கொண்டு விகாரமாக வெளிப்படும்போதும், அதற்கு உடனே உடுக்கை அடித்து சக்தி ஏற்றும் திடீர் பூசாரியாகி விடுகிறார்கள், போலி கம்யூனிஸ்டுகள். பார்ப்பனிய முடை நாற்றத்திலிருந்து திணறி, மக்களே வெளிவரும்போது கூடச் சுற்றி முற்றுகையிட்டு, இந்து மதப் பிரச்சார மயக்கத்தில் அவர்களை மூழ்கடிக்கிறார்கள்! இப்போது, ஜெயேந்திரன் கைதையும் 'இந்துமத' புனரமைப்பு பிரச்சாரத்திற்கு பயன்படுத்துகின்றனர். இதற்காக, ''சங்கர மடத்தின் மீது நம்பிக்கையுள்ள பல லட்சம் பக்தர்கள் இன்று விரக்தியில் உள்ளனர்'' என்று ஆர்.எஸ்.எஸ். போன்றே புரளியைக் கிளப்புகின்றனர்.

இப்படி 'சிவப்பு' வண்ணத்தில் உலவும் ஏராளமான 'காவி' உதிரிகளை, ஜெயேந்திரனின் கைது விவகாரம் அம்பலத்திற்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளது.

● குணசேகரன்

**அட்டைப்பட விளக்கம்**

**ஜம்மு-காசுமீரில், பள்ளிக்குச் செல்லும் சிறுவர்களைக் கூட தீவிரவாதிகள் எனச் சந்தேகக் கண்ணோடு துப்பாக்கி முனையில் விசாரணை செய்யும் இந்திய இராணுவச் சிப்பாய்கள்.**



படிப்பகம்

www.padippakam.com

# இந்தியா:
# ஏகாதிபத்தியங்களின் குப்பைத் தொட்டியா?

'**கா**யலாங்கடை' ஓட்டை உடைசல்களோடு தொழிலாளர்களின் உயிர்களும் நசுக்கி அழிக்கப்படுகிறதே, தெரியுமா உங்களுக்கு?

தலைநகர் தில்லி அருகில் உ.பி. மாநிலத்தின் எல்லையோரம் இருக்கும் நகரம், காசியாபாத். செப்டம்பர் 30-ஆம் தேதி அங்கு, இரும்பு கழிவுத் தொழிற்சாலையில் வேலை பார்த்த 10 தொழிலாளர்கள் கண்ணிமைக்கும் நேரத்தில் சதைக் கோளங்களாகப் பிய்த்தெறியப்பட்டு உயிரற்றுப் போனார்கள்.

அமெரிக்காவின் அடியாளாக ஈராக்குக்குப் போகாமலேயே இந்தியாவிலேயே இராணுவ குண்டுகளுக்குப் பலியானவர்கள் இவர்கள்!

உலோகக் கழிவுகள் என்ற பெயரில் போர் நடக்கும் இடங்களிலிருந்து இறக்குமதிச் செய்யப்பட்ட போர்க் கழிவுகளைக் கையாளும் உருக்கு ஆலைத் தொழிலாளர்கள் இவர்கள்.

ஹீரோ சைக்கிள் முதல் ஹூண்டாய் கார் வரை அவற்றுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்கள் தயாரிக்கவும் மற்றும் பல்வேறு சிறு இயந்திரங்கள், கருவிகள் தயாரிப்பதற்கான மலிவான உலோகம்தான் போர் கழிவுகள். இவற்றை உருக்கி தேவைக்கு ஏற்ப உருட்டியோ, நீட்டியோ, தகடாக்கியோ பயன்படுத்திக் கொள்கின்றன, சிறு தொழில் நிறுவனங்கள். தொழில் போட்டியால் தயாரிப்புப் பொருட்களின் விலைகுறைப்புக்காக தெரிந்தே இந்த அபாயத்தில் இறங்கியிருக்கின்றன, இந் நிறுவனங்கள். பன்னாட்டு நிறுவனங்கள் தங்களுடைய இலாப வெறிக்காக இதை ஊக்குவிக்கின்றன.

இதற்காக, உ.பி., மகாராஷ்டிரா, குஜராத், மே.வங்கம், ராஜஸ்தான், பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் இரும்பு கழிவு உருக்குத் தொழிற்சாலைகள் ஏராளமாக உள்ளன. இவற்றுக்குத் தேவையான இரும்புக் கழிவுகள், தொடர்ந்து போர் நடந்து கொண்டிருக்கும் மேற்காசியா மற்றும் ஆப்பிரிக்க நாடுகளிலிருந்து ஏலத்தில் எடுக்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு, ரூ. 5,500 கோடி மதிப்புள்ள போர் கழிவுகள் இந்தியாவிற்குள் வருகின்றன.

இவற்றில், கையெறி குண்டுகள், விமான எதிர்ப்பு பீரங்கிக் குண்டுகள், இயந்திரத் துப்பாக்கி ரவைகள், ஏவுகணைகள், ராக்கெட்டுகள், வெடி பொருட்கள் ஆகியன அடக்கம். இவற்றை நசுக்கி அழுத்தும்போதுதான் 10-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் உடல்சிதறி இறந்து போனார்கள். இதை ஒரு விபத்தாகச்சித்தரித்து, வழக்கம் போல் ஒரு விசாரணைக் கமிசனை நியமித்துவிட்டது, காங்கிரசு மைய அரசு.

காரணம், இரும்புக் கழிவுகளை கையாள்வதில், இறக்குமதி செய்வதில் எந்த ஒரு கொள்கையும் மைய அரசால் இது நாள் வரையில் இயற்றப்பட வில்லை. ஆனால், ஏகாதிபத்திய மேற்குலக நாடுகள், இரும்புக் கழிவுகளை - குறிப்பாக, போர் கழிவுகளை தங்கள் நாட்டில் இறக்குமதி செய்வதை முற்றிலுமாகத் தடை செய்துள்ளன. எனவே, யுத்தக் கழிவுகளைக் கொட்டுவதற்கான குப்பைத் தொட்டியாக இருப்பது மூன்றாம் உலக ஏழை நாடுகள்தான். ஆனால், இந்த யுத்தங்களை நடத்துவதோ மேற்குலக ஏகாதிபத்தியங்கள்மற்றும் அவர்களது எடுபிடிகள். என்னே கொடுமை!

இந்தியாவின் 12 துறைமுகங்களில் மும்பையைத் தவிர பிற இடங்களில் கப்பல்களில் வரும் சரக்கு 'கன்டெய்னர்'களை சோதிக்கும் 'ஸ்கேனர்'களோ 'பாம்-டிடெக்டர்களோ' இல்லை. இந்த லட்சணத்தில் 'பயங்கரவாதத்திற்கு' எதிராக, ரயில் நிலையங்களில் தான் சொந்த மக்களையே வேவு பார்க்கிறது, இந்திய அரசு!

ஏற்கனவே, இந்திய கடல் எல்லையில் ஏராளமான அணுக் கழிவுகளையும், இரசாயன - உயிரி ஆயுதக் கழிவுகளையும் ஏகாதிபத்தியங்கள் ரகசியமாகக் கொட்டிவிட்டுச் செல்கின்றன. இவை ஏற்கனவே, 'கிரீன்பீஸ்' என்ற உலக சுற்றுசூழல் கண்காணிப்பு நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டு பகிரங்கப் படுத்தப்பட்டன. இருபது ஆண்டுகளுக்கு முன்பு, யூனியன் கார்பைடு எனும் ஏகாதிபத்திய நிறுவனத்தால் ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட போபால் நகரத்து மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்; பலர் உடல் ஊனமுற்றனர். அங்கு பிறக்கும் குழந்தைகள் இன்னும் உடல் ஊனமுற்று பிறக்கின்றன. ''விபத்து'' என்ற சட்ட மூடிக்குள் அது மூடப்பட்டது. கல்பாக்கம், கூடங்குளம், ஸ்டெர்லைட் ஆகிய ஆலைகளின் இரசாயன - அணுகதிரியக்கக் கழிவுகள், பெப்சி, கோக் போன்ற பன்னாட்டு குளிர்பான நிறுவனங்களின் நச்சுக் கழிவுகள்; ஏகாதிபத்திய நிறுவனங்களின் உரம் பூச்சி மருந்துகள் - இவற்றால், இந்திய பூமி நஞ்சாக மாற்றப்படுகிறது. மேலும், தேக்கு மரப் பண்ணைகள், இறால் பண்ணைகள் மற்றும் திசு வளர்ப்பு முறையிலான வீரிய பழங்கள், பூக்கள், ரகங்கள் என்று தொடர் ஒற்றைப் பயிர் முறையால் இயற்கையான சுற்றுசூழலின் பன்முகத் தன்மை குரூரமாக சிதைக்கப்படுகிறது.

இப்படித் தங்களின் பொருளாதாரக் கொள்கையால் இந்தியாவைக் குப்பைத் தொட்டியாக மாற்றி வரும் இந்திய ஆளுங் கும்பலுக்கு, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது?

● **பச்சையப்பன்**

உலோகக் கழிவுகள் என்ற பெயரில் இறக்குமதி செய்யப்பட்டுள்ள வெடிக்காத ராக்கெட் குண்டுகள்.



www.padippakam.com

## இராணுவ ஆக்கிரமிப்பு:

# ஈராக்கில் மட்டுமல்ல; இந்தியாவிலும்தான்!

இந்தியாவின் 58-ஆவது 'சுதந்திர' தினத்தை, இந்திய அரசும் ஓட்டுக் கட்சிகளும் கடந்த ஆகஸ்டு 15 அன்று கொண்டாடிக் கொண்டிருந்த வேளையில், மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த பேபம் சித்தரஞ்ஜன் என்ற இளைஞர், அம்மாநிலத் தலைநகர் இம்பாலில் உள்ள பிஷன்பூர் கடைவீதியில் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார்.

பேபம் சித்தரஞ்ஜனின் தற்கொலை, வாழ்க்கையில் விரக்தியடைந்துவிட்ட இளைஞரின் பரிதாபகரமான முடிவு அல்ல; மாறாக, அவரது தற்கொலை, இந்திய ஜனநாயகத்தின், சுதந்திரத்தின் போலித்தனத்தை அம்பலப்படுத்திவிட்ட தனிமனிதப் போராட்டம்; மணிப்பூரில் நடந்து வரும் இந்திய இராணுவ ஒடுக்குமுறைகளுக்கு எதிரான கலகம்.

''மணிப்பூரில் அமல்படுத்தப்பட்டுள்ள ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தின் பிடியில் சிக்கிக் கொண்டு சாவதைவிட, தீக்குளிப்பது மேலானது. இந்த மன உறுதியோடு, எனது மக்களுக்கு ஒளிகாட்டும் மனிதத் தீப்பந்தமாக, நான் முன்னே சென்று கொண்டிருக்கின்றேன்'' எனத் தனது தற்கொலை பற்றிக் குறிப்பிட்டுள்ளார், பேபம் சித்தரஞ்ஜன்.

மணிப்பூர் மாணவர் சங்கத்தின் பிஷன்பூர் கிளையின் ஆலோசகராகச் செயல்பட்டு வந்த பேபம் சித்தரஞ்ஜனின் தியாகத்தைப் போற்றும் விதமாக, மணிப்பூரி மக்கள், அவருக்கு ''அதோபா'' (மாவீரன்) என்ற பட்டம் சூட்டி நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.

●●●

1942-இல் இந்திய மக்களின் சுதந்திரப் போராட்டம் உச்சத்தில் இருந்த பொழுது, ஆங்கிலேய காலனி அரசு ஆயுதப்படை சிறப்பு அதிகார ஆணையொன்றைப் பிறப்பித்தது. இந்தியா 'சுதந்திர'மடைந்தபின் இந்த ஆணையைக் குப்பைக் கூடைக்குள் தூக்கியெறியாமல், அதனை 1958-இல் மைய அரசின் சட்டமாக மாற்றினார், 'சோசலிச' நேரு.

ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தின்படி, இராணுவம், துணை இராணுவப் படையைச் சேர்ந்த அதிகாரியில்லாத சாதாரண ஹவில்தார் கூட (தலைமைக் காவலர்), தான் சந்தேகப்படும் ஒருவரை, நீதிமன்ற உத்திரவோ, எவ்வித விளக்கமோ அளிக்காமல் கைது செய்ய முடியும்; நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறாமலேயே, சந்தேகப்படும் நபரின் இருப்பிடத்துக்குள் நுழைந்து தேடுதல் வேட்டை நடத்த முடியும். சந்தேகப்படும் நபரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய முடியும்.சந்தேகப்படும் நபரைச் சுட்டுக் கொன்றால்தான் சட்டம் - ஒழுங்கைப் பாதுகாக்க முடியும் என முடிவெடுத்தால் மேலதிகாரிகளின் ஒப்புதலைப் பெறாமலேயே அவரைச் சுட்டுக் கொன்றுவிடவும் முடியும்.

இச்சட்டத்தின்படி, இந்தியாவின் எந்தவொரு பகுதியினையும், அப்பகுதி அமைந்துள்ள மாநில அரசின் ஒப்புதலோடு, கலவரப் பகுதியாக அறிவித்துவிடும் உரிமை மைய அரசிற்கு உண்டு. இப்படி கலவரப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் இறக்கிவிடப்படும் இராணுவமோ/ துணை இராணுவப் படைகளோ சட்டம் - ஒழுங்கைப் பாதுகாப்பது என்ற பெயரில் அத்துமீறி நடந்து கொண்டால் கூட, அப்படையினரை விசாரிக்கவோ, அவர்கள் மீது வழக்குத் தொடுக்கவோ மாநில அரசிற்கு எவ்வித உரிமையும் கிடையாது. மைய அரசு ஒப்புதல் அளித்தால்தான், அப்படையினரை விசாரிக்கவே முடியும்.

●●●



ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி, தீக்குளித்து மரணத்தைத் தழுவும் பேபம் சித்தரஞ்சன்.

1947-இல் தனி அரசியல் சாசனத்தைக் கொண்டிருந்த மணிப்பூரை, 1949-இல் இந்திய அரசு தன்னுடன் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்டது. ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம், மணிப்பூரிலுள்ள தாமெங்லாங் உள்ளிட்ட மலை பிராந்தியங்களில் 1961-ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. 1980-ஆம் ஆண்டு தொடங்கி இக்கருப்புச் சட்டம் மணிப்பூர் முழுவதிலும் அமலுக்கு வந்


படிப்பகம்

www.padippakam.com

தது. அன்றிலிருந்து ஏறத்தாழ 20 ஆண்டுகளுக்கும் மேலாக இச்சட்டத்தை நீக்கக் கோரி மணிப்பூரி மக்கள் போராடி வருகிறார்கள்.

''இச்சட்டத்தை நீக்கிவிட்டால், கலவரப் பகுதியாக அறிவிக்கும் அதிகாரத்தை அரசு இழந்துவிடும்'' என்கிறார், 'மார்க்சிஸ்டு' கட்சியைச் சேர்ந்த சீத்தாராம் யெச்சூரி. 'மார்க்சிஸ்டு'கள் ஆளும் திரிபுராவில் 27 போலீசு வட்டாரப் பகுதிகள் இச்சட்டத்தின் கீழ் கலவரப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், இங்கெல்லாம் அமைதி திரும்பி விட்டதா என்றால், சுடுகாட்டு அமைதி திரும்பியிருக்கிறது என்றுதான் சொல்ல முடியும்.

1980-இல் ஹெய்ரங் கோய் தோங் பகுதி; 1987-இல் சேனாபதி மாவட்டத்தில் உள்ள ஒய்னாய் கிராமம்; 1994-இல் யாங்குல் லேன், வில்லோங், சாஜுபா கிராமங்கள்; 1995-இல் இம்பாலில் உள்ள மண்டல மருத்துவக் கல்லூரி; 2000-இல் மாவோம் கிராமம் - இது, கடந்த இருபது ஆண்டுகளில் இந்திய இராணுவம் மணிப்பூரில் நடத்திய இனப்படுகொலைகளின் பட்டியல்.

வடகிழக்கிந்தியாவில் இனப்படுகொலையை நடத்தி வரும் இராணுவத்தை ஓட்டுக் கட்சிகளோ, பத்திரிகைகளோ பயங்கரவாதிகள் என முத்திரை குத்துவதில்லை. ஆனால், இந்த இனப்படுகொலையை நடத்துவதற்கு அதிகாரம் தரும் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரும் போராளிகளைத் தீவிரவாதிகள் என முத்திரை குத்துகிறார்கள். ஜனநாயக உரிமைகளுக்காக வடகிழக்கிந்திய மக்கள் நடத்தும் போராட்டங்களை, பாகிஸ்தானின் சதி என அவதூறு செய்கிறார்கள்.

ஆனால், உண்மைக்கு எத்தனை நாள்தான் இரும்புத் திரை போட முடியும்? மணிப்பூரைச் சேர்ந்த தங்ஜம் மனோரமா என்ற இளம் பெண்ணை அசாம் துப்பாக்கிப் படை பாலியல் பலாத்காரப்படுத்தி சுட்டுக் கொன்றதைக் கண்டித்து அம்மாநிலத்தில் நடந்து வரும் போராட்டங்கள், இந்திய அரசின் கோர முகத்தை இந்தியாவில் மட்டுமல்ல, உலகெங்கிலுமே அம்பலப்படுத்தி விட்டன.

கடந்த ஜூலை 11-ஆம் தேதி நள்ளிரவில் தங்ஜம் மனோரமாவை, அவரது வீட்டிற்குள் நுழைந்து, கைது செய்து இழுத்துச் சென்றது அசாம் துப்பாக்கி படை. மறுநாள் காலையில், அவரது உயிரற்ற உடல் அலங்கோலமான அரை நிர்வாண நிலையில், மாபோவ் மாரிங் என்ற கிராமத்தின் அருகே கிடந்தது. அவரது உடலெங்கும் நகக் கீறல்கள் இருந்தன. அவரது வலது தொடையில் கத்தியால் குத்தப்பட்ட ஆழமான காயம் இருந்தது. அவரது முதுகுப் புறத்தில் ஏழு குண்டுகள் துளைத்திருந்தன. அதில் ஒரு குண்டு அவரது பெண் உறுப்பைச்சிதைத்து வெளியேறி இருந்தது.




**''இந்திய இராணுவமே எங்களையும் பாலியல் பலாத்காரப் படுத்து'' என அசாம் துப்பாக்கிப் படை தலைமை முகாம் முன் நிர்வாணமாக ஆர்ப்பாட்டம் நடத்தும் மணிப்பூரி பெண்கள்.**

மனோரமாவின் படுகொலையை யடுத்து, மணிப்பூரில் இயங்கிவரும் போராளிக் குழுக்களும், பல்வேறு சமூக, கலாச்சார இயக்கங்களும் ஒன்றிணைந்து, ''அபுன்பா லுப்'' என்ற பெயரில் ஐக்கிய முன்னணியொன்றை அமைத்தன. இம்முன்னணி, ''மனோரமாவைக் கொன்ற சிப்பாய்களைக் கைது செய்து, வழக்கு தொடர வேண்டும்; இந்திய இராணுவம் மணிப்பூர் மக்களை இனப்படுகொலை செய்து வருவதை உடனடியாக நிறுத்த வேண்டும்; இந்திய இராணுவத்தையும், அசாம் துப்பாக்கிப் படையையும் மணிப்பூரிலிருந்து வெறியேற்ற வேண்டும்; மணிப்பூரைக் கலவரப் பகுதியாக அறிவித்திருப்பதையும்; மணிப்பூரில் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச்சட்டம் அமல்படுத்தப்படுவதையும் உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன் வைத்து, ஜூலை மாதம் தொடங்கி, முழுக்கடையடைப்பு ஆர்ப்பாட்டம், ஊர்வலம், தொடர் உண்ணா விரதம், சாலை மறியல் எனப் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வருகிறது. இப்போராட்டங்கள் அனைத்திலும், ''தீப்பந்தம் ஏந்திய பெண்கள்'' என்ற பெயர் கொண்ட பெண்கள் - தாய்மார்கள் அமைப்பு முன்னணியில் நிற்கிறது.

ஜூலை 15 அன்று, இவ்வமைப்பைச் சேர்ந்த 12 பெண்கள், இம்பாலில் உள்ள காங்லா கோட்டையில் அசாம் துப்பாக்கிப் படையின் தலைமையகம் முன்பாக, தங்களின் ஆடைகள் முழுவதையும் களைந்துவிட்டு, ''இந்திய இராணுவமே, எங்களின் சதைகளைக் கொத்திக் குதறு'', ''எங்களைப் பாலியல் பலாத்காரப்படுத்து'' என முழங்கிக் கொண்டு நிர்வாணமாகவே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டம் தான், மணிப்பூரில் இந்திய இராணுவம் நடத்திவரும் அட்டூழியங்களை இனியும் மூடி மறைக்க முடியாது என்ற வகையில் அம்பலப்படுத்தி, நியாய உணர்வு கொண்ட மக்களின் மனசாட்சியை உலுக்கி எடுத்தது.

மாநில அரசு போட்டிருந்த ஊரடங்கு உத்தரவையும் மீறி, ஜூலை 17 அன்று இம்பாலில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் மீது நடத்தப்பட்ட ரப்பர் குண்டு துப்பாக்கி சூட்டில், ஐந்து பெண்கள் படுகாயமடைந்தனர். ஊரடங்கு உத்தரவு, துப்பாக்கிச் சூடு போன்ற அடக்குமுறைகளையும் மீறி மணிப்பூர் மாநிலமெங்கும் பெண்கள் நடத்திய போராட்டங்களில், போலீசு கண்காணிப்பாளர் அலுவலகங்களையும்; அசாம் துப்பாக்கிப் படையின் முகாம்களையும் சுற்றி வளைத்துக் கைப்பற்ற முயன்றனர்.

ஜூலை 17 அன்று போலீசு நடத்திய ரப்பர் குண்டு துப்பாக்கிச் சூட்டில் 22 வயதான கல்லூரி மாணவி மேமிதா மரணமடைந்தார். ஜூலை 21 அன்று, எல்லைப் பாதுகாப்புப் படை நடத்திய தாக்குதலில் எட்டு பெண்கள் படுகாயமடைந்தனர்.

ஜூலை 24 அன்று மணிப்பூர் முன்னேற்ற இளைஞர் முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த ஐந்து கல்லூரி மாணவர்கள், மணிப்பூர் மாநில முதல் மந்திரி அலுவலகம் முன்பாக, தங்க

www.padippakam.com

ளின் உடலில் தீ வைத்துக் கொண்டு போராடினர்.

இத்தீக்குளிப்பு சம்பவம் நடந்த இரண்டாம் நாள் 24 வயதான இளைஞர், அசாம் துப்பாக்கிப் படையின் முகாம் முன்பாக, தனது மணிக்கட்டை அறுத்துக் கொண்டு போராடினார்.

மணிப்பூர் பல்கலைக்கழக மாணவர் அமைப்பு ஆளுநர் மாளிகை முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின் மீது போலீசு நடத்திய தடியடியில் பல மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

இந்தியாவின் 58-ஆவது சுதந்திர தினமான ஆகஸ்டு 15 அன்று, மணிப்பூரின் பல்வேறு இடங்களில் இந்தியாவின் மூவர்ணக் கொடி எரிக்கப்பட்டது. பேபம் சித்தரஞ்ஜன் தனது இன மக்களின் சுதந்திரத்திற்காக, ஜனநாயக உரிமைகளுக்காகத் தன்னைத்தானே எரித்துக் கொண்டு தியாகியானார்.

அரசு ஊழியர்களையும், சட்டமன்ற உறுப்பினர்களையும் பதவி விலக நிர்பந்திப்பதன் மூலம் மைய - மாநில அரசுகளோடு எந்த விதத்திலும் ஒத்துழைக்க மறுப்பது; இந்தியப் பொருட்களைப் புறக்கணிப்பதன் மூலம், சுய சார்பு இயக்கத்தைக் கட்டியமைப்பது; ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் போர்க்குணமிக்க போராட்டங்களை நடத்துவது - என மூன்று வழிகளில் மணிப்பூரி மக்கள் தங்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் தேசிய சுய நிர்ணய உரிமைக்காகவும் கடந்த நான்கு மாதங்களாக மிகத் தீவிரமாகப் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

●●●

ரப்பர் குண்டுகளாலும், தடியடியாலும், கண்ணீர்ப் புகை குண்டுகளாலும் இப்போராட்டங்களை ஒடுக்கி விடலாம் என்ற காங்கிரசின் திட்டம் மண்ணைக் கவ்விவிட்டது. அதனால், சில சில்லறை சலுகைகளை மீண்டும் வீசியெறிவதன் மூலம் போராட்டத்தை நீர்த்துப் போகச் செய்ய முயலுகிறது. ஆனால், இந்தச் சலுகைகளை அளிப்பதில் கூட காங்கிரசு கும்பல் நியாய உணர்வோடு நடந்து கொள்ளவில்லை.

மனோரமாவின் படுகொலையைப் பற்றி விசாரிக்க மணிப்பூர் மாநிலக் காங்கிரசு அரசு, உபேந்திரா கமிசனை நியமித்தது. அதேசமயம், மைய அரசோ இராணுவத்தைத் தூண்டிவிட்டு, இக்கமிசனுக்கு எதிராக கௌஹாத்தி உயர்நீதி மன்றத்தில் வழக்கைப் பதிவு செய்து, இக்கமிசனின் விசாரணைக்கு இடைக்கால தடையுத்தரவை






**ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை நீக்கக் கோரி பள்ளி மாணவர்கள், தங்கள் பாட புத்தகங்களை எரிக்கிறார்கள் (மேலே). ஜூலை 23 அன்று இம்பாலில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் பொழுது, போலீசின் கண்ணீர் புகைக் குண்டு தாக்குதலில் காயமடைந்த பெண்.**

வாங்கிவிட்டது.

மணிப்பூர் மாநிலத் தலைநகர் இம்பாலில் அமைந்துள்ள ஏழு சட்டமன்றத் தொகுதிகளில் மட்டும் ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை விலக்கிக் கொண்ட மாநில அரசு, அதன் மூலம் போராட்டத்தின் தீவிரத்தைத் தணிக்க முயற்சி செய்தது. ஆனால், போராட்டத்தைத் தலைமையேற்று நடத்தும் ''அபுன்பா லுப்'' அமைப்பு, இச்சட்டத்தை மணிப்பூர் முழுவதிலும் இருந்து விலக்கிக் கொள்ள வேண்டும் என்பதில் உறுதியாக நின்றதால் அவ்வமைப்பைச் சேர்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட தலைவர்களை தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைத்து விட்டது.

இராணுவமோ, மணிப்பூரின் சேனாபதி மாவட்டத்தில் வாழும் நாகா இன மக்களைத் தூண்டிவிட்டு, ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்திற்கு ஆதரவாக ஊர்வலம் நடத்தச் செய்தது.

நவம்பர் மாத மத்தியில் மணிப்பூருக்கு அரசுமுறைப் பயணம் செய்த மன்மோகன் சிங், மணிப்புரி மக்கள், தங்களின் தேசிய கலாச்சார சின்னமாக மதிக்கும் காங்க்லா கோட்டையை, அசாம் துப்பாக்கி படையிடமிருந்து திரும்பப் பெற்று, அக்கோட்டையை மணிப்பூர் மாநில அரசிடம் ஒப்படைத்தார். இதனை முதலாளித்துவப் பத்திரிகைகள் அனைத்தும் அமைதிக்கான முயற்சியாகப் புகழ்ந்து தள்ளின. ஆனால், பிரதமரின் இந்த அமைதிப் பயணத்


படிப்பகம்

www.padippakam.com

திற்கு முதல் நாள்தான், இந்திய இராணுவம், மியான்மர் இராணுவத்தின் ஒத்துழைப்போடு, சரசந்த்புர் பகுதி மக்களின் மீதும், அப்பகுதிகளில் முகாமிட்டிருந்த மக்கள் விடுதலைப் படை போராளிகள் மீதும் மிகப் பெரும் தாக்குதலை தொடுத்தது.

வடகிழக்கு இந்தியாவில் செயல்படும் போராளிக் குழுக்கள் மைய அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தத் தயாராகவே இருக்கின்றன. ஆனால், இந்திய அரசுதான் அமைதிக்கான முயற்சிகளில் அக்கறை காட்டவில்லை. நாகாலாந்து, மணிப்பூர், திரிபுரா, அசாம் மாநிலங்களில் இருந்து இராணுவத்தைத் திரும்பப் பெறவோ, ஆயுதப் படை சிறப்பு அதிகாரச் சட்டத்தை விலக்கிக் கொள்ளவோ சம்மதிக்க மறுக்கும் இந்திய அரசு, அமைதிப் பேச்சு வார்த்தைக்கு போராளிகள் 'வன்முறை'யைக் கைவிட வேண்டும் என நிபந்தனை விதிக்கிறது.

நாகலாந்தில் இயங்கும் நாகலாந்து தேசிய சோசலிசக் கவுன்சில் (ஐசக் - முய்வா பிரிவு) போராளிகளுக்கும் இந்திய அரசுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தாகி ஆறு ஆண்டுகள் உருண்டோடி விட்டன. ஆனால், அக்குழுவினருடன் பேச்சு வார்த்தை நடத்த ஒரு அதிகாரபூர்வ குழுவைக் கூட இன்னும் அமைக்காததால், நாகாலாந்து பிரச்சினை தொடங்கிய இடத்திலேயே இன்றும் நின்று கொண்டிருக்கிறது.

அதேசமயம், வடகிழக்கு இந்தியாவில் தேசிய சுயநிர்ணய உரிமை கேட்டுப் போராடும் போராளிக் குழுக்களை ஒடுக்க மியான்மர், நேபாளம், பூடான் ஆகிய அண்டை நாடுகளின் இராணுவத்தோடு இணைந்து, இந்தியா தேடுதல் வேட்டைகளையும், தாக்குதல்களையும் நடத்துகிறது.

மேலும், மணிப்பூரில் நாகா பழங்குடி இன மக்களுக்கும், மெய்தி இன மக்களுக்கும் இடையேயும்; நாகாலாந்தில் நாகா - குக்கி பழங்குடி இனங்களுக்கும் இடையேயும்; அசாமில், அசாமியர்களுக்கும், போடா பழங்குடியினருக்கு இடையேயும் நடந்துவரும் மோதல்களில், இந்திய உளவு அமைப்புகளுக்கும் பங்குண்டு. அங்கு நடைபெறும் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை, சகோதர இனச் சண்டையாகச் சீரழிப்பதற்காகவே இந்திய இராணுவம், பல்வேறு கூலிப்படைகளையும் உருவாக்கிவிட்டுள்ளது.

இந்திய அரசு, வடகிழக்கு இந்தியாவை, சீனாவைக் கண்காணிப்பதற்கு வசதியான இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகப் பார்க்கிறது. இந்தியாவிற்கான அமெரிக்க தூதர், ''அமெரிக்காவின் உளவு அமைப்பான எஃ.பி.பி.ஐ.இன் உதவி வேண்டுமானால், கேளுங்கள்'' என மணிப்பூர் மாநில முதல்வருக்குக் கடிதம் எழுதியதற்கு, இந்தச் சீன கண்காணிப்பு என்ற அம்சம்தான் காரணம். இதனால்தான், இந்திய அரசு, வடகிழக்கிந்திய பகுதிகளைத் தன்னுடன் வலுக்கட்டாயமாக இணைத்துக் கொண்ட நாளில் இருந்தே, அம்மாநிலங்களை இராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது.

இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் இருக்கும் ஒரு சமூகம் எப்படி அமைதியாக இருக்க முடியும்? வடக்கிழந்தியாவில் நிலவும் அமைதியின்மையை, இந்திய ஆளும் கும்பல் தீவிரவாதம் என்கிறது. நாம் சுயநிர்ணய உரிமைக்கான போர் என்கிறோம்!

**● செல்வம்**

## வாசகர் கடிதம்

● தவம் மறைந்து அல்லவை செய்தல் புதல் மறைந்து வேட்டுவன் புள் சிமிழ்த் தற்று - என்ற குறளுக்கேற்ப நன்னெறி பிறழ்ந்து வாழ்ந்த தீயவரான, ஜெயேந்திரனாக பெயர் மாற்றம் செய்து கொண்ட இருள் நீக்கி சுப்பிரமணிய ஐயரின் லீலைகளை மிகத் துல்லியமாக வெளியிட்ட புதிய ஜனநாயகம் இதழுக்கு சிந்தனையாளர்கள் சார்பாக நன்றியையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**- ஓஷோதாசன், மாப்பிள்ளைகுப்பம்**

● எதிர்க்கட்சிகளின் மவுனம்: மர்மம் என்ன? - என்ற கட்டுரை, சங்கரமடத்துக்கும் பதவி நாற்காலிக்கும் உள்ள பூணூல் தொடர்பைப் புரிய வைத்தது. தமிழின, தலித்திய அமைப்புகளும் மவுனமாக இருப்பதன் மர்மத்தைப் பற்றியும் எழுதியிருக்கலாம். புரட்சிகர அமைப்புகளின் போராட்டத்தை விளக்கும் புகைப்படங்களும், கருத்துச் சித்திரங்களும் மிக அருமை.

**- கரிகாலன், தஞ்சை.**

● பார்ப்பன பயங்கரவாதிகளின் கூடாரம்தான் சங்கரமடம் என்ற உண்மையை டிசம்பர் இதழ் எடுப்பாக உணர்த்தியது. பெரும்பான்மை 'இந்து'க்கள் சங்கராச்சாரி கைதை ஆதரித்துக் கொண்டாடுவதும், பார்ப்பன சாதியினர் மட்டுமே 'போராட்டம்' நடத்துவதும் பார்ப்பனர்களை மேலும் தனிமைப்படுத்தி வருகிறது. இருப்பினும், கொல்லப்பட்டவனும் பார்ப்பான், கொலைகாரனும் பார்ப்பான், கைது செய்ததும் பாப்பாத்தி என்ற உண்மை நிலை அவர்களுக்கு படிப்படியாக உரைக்கத் தொடங்கியுள்ளது.

**- யாழினி, சென்னை**

● ரிலையன்ஸ் மோசடி பற்றிய கட்டுரை, சாமானியர்களும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக அமைந்துள்ளது. தொலைதொடர்பு மேல்முறையீட்டு தீர்ப்பாயமும் பா.ஜ.க.வின் கொள்கைப் பிரச்சாரகரான குருமூர்த்தியும் கூட, நடக்கும் முறைகேடுகளை நியாயப்படுத்த முடியாமல், கையைப் பிசையும் நிலையை எடுத்துரைத்துள்ள விதம், நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அருகதையை அம்பலப்படுத்திக் காட்டியது.

**- ஜீவா, சென்னை.**

● ஓட்டுக் கட்சி அரசியல்வாதிகள், கிரிமினல் குற்றக் கும்பல்கள், போலீசு - அதிகார வர்க்கம், மதவாதிகள் - நிறுவனங்கள் எனும் நான்கு வலைப்பின்னல்களின் ஆதிக்கத்தையும் அவற்றை மக்கள் அழித்தொழிக்க வேண்டிய அவசியத்தையும், பார்ப்பன மாஃபியா சங்கராச்சாரி பற்றிய கட்டுரைகள் தெளிவாக்கின. சர்வதேச சந்தையில் விலையேறுவதாகப் புளுகி, உலக வங்கி உத்திரவுப்படி மானியங்களை ஒழித்துக் கட்டும் நடவடிக்கையாகவே பெட்ரோலியப் பொருட்கள் விலையேற்றப்பட்டுள்ளன என்ற உண்மையை பு.ஜ. மட்டுமே எடுப்பாக உணர்த்தியுள்ளது.

**- வாசகர்வட்டம், கடலூர்.**

● ''ஜெகத்குரு'' கைது - காஞ்சிபுரம் கூடச் சீந்தவில்லை என்ற ரிப்போர்ட் உயிர்த்துடிப்புடன் உண்மைகளை எடுத்துரைக்கும் வண்ணம் இருந்தது. கொடுங்கோன்மை வாய்ந்த பார்ப்பன பயங்கரவாதக் கும்பலின் தலைமைச் செயலகமாக இருந்த காஞ்சி மடத்தின் பொய்த்திரை கிழித்து எறியப்பட்டுள்ளது.

**- மலர்விழி, சிவகங்கை.**

● ஜெயேந்திரன் கைது எதிர்க்கட்சிகளின் மௌனம் ஏன்? - கட்டுரை சரியான தருணத்தில் எழுப்பப்பட்ட கேள்வி தலித்தியலித்திலிருந்து தமிழ் தேசியம் வரை பேசும் அத்தனை பேரும் வாய்ச்சவடால் பேர்வழிகள் என்பது அம்பலப்பட்டு போயுள்ளது. நீ பேசுவது இந்திய புரட்சி - முதலில் தமிழ் நாட்டை கவனி என்றுபேசுபவர்களின்அரசியல் தமிழத்திலேயே எடுபடாதது அவர்களின் அரசியல் பரிதாபத்தையே உணர்த்துகிறது.

**- M. சுரேஷ், சென்னை - 116.**

● ஜெயேந்திரன் கைது செய்யப்பட்டது தமிழக அரசியலில் ஒரு முக்கிய பதிவாகும். அவ்வகையில் பு.ஜ.வானது காமகோடி பீடத்தினை தகர்க்கும் சிறப்பிதழாக வந்தது. பத்திரிகை உலகில் அதன் தனிச் சிறப்பான தன்மையை பதிவாக்கியுள்ளது. இனவாதிகளையும், தலித்தியம் - போலி மார்க்சியம் பேசும் கும்பல்களின் முகத்திரைகளையும் கிழித்துள்ளது. பார்ப்பன பாசிச அரசியலை தொடர்ந்து அம்பலப் படுத்துவதில் பு.ஜ.வுக்கு நிகரில்லை.

**- கதிரவன், சென்னை - 15.**

www.padippakam.com

# இராணுவச் செலவு அதிகரிப்பு
# மக்களின் பாதுகாப்புக்கா?

"ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு ஓர் ஆண்டில் 100 நாட்களுக்கு வேலை; மைய அரசின் நிதி உதவியோடு அனைத்து ஆரம்ப மற்றும் உயர்நிலைப் பள்ளிகளிலும் மதிய சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வருவது; கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு அதிக நிதி ஒதுக்கீடு" - இவையனைத்தும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி வெளியிட்டுள்ள குறைந்தபட்ச பொது வேலை திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் சில வாக்குறுதிகள்.

ஆனால், இதுநாள் வரையில், அக்கூட்டணி அறிவித்துள்ள இக்கவர்ச்சி வாக்குறுதிகளில் ஒன்றைக் கூட உருப்படியாக நிறைவேற்றவில்லை. "நிதி இல்லை" என்ற ஒரே காரணத்தை மட்டும் கூறி, இந்தத் திட்டங்களை வெட்டிக் குறுக்கி விட்டது, அக்கூட்டணி. அதேசமயம், "இராணுவத்துக்கு அதிக நிதி ஒதுக்குவது" என்று குறைந்தபட்ச பொது வேலைத்திட்டத்தில் கொடுக்கப்பட்ட வாக்குறுதியை மட்டும் அக்கூட்டணி கைகழுவவில்லை.

கிராமப்புற மேம்பாட்டுக்கு இந்த ஆண்டின் பட்ஜெட்டில் ஒதுக்கப்பட்ட நிதி 15,998 கோடி ரூபாய். இது, கடந்த ஆண்டை ஒப்பிடும்பொழுது, வெறும் 1,928 கோடி ரூபாய்தான் அதிகம். ஆனால், இராணுவச் செலவுகளுக்கோ, இந்த ஆண்டில், கடந்த ஆண்டு பட்ஜெட்டை விட 11,000 கோடி ரூபாய் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

"பா.ஜ.க. தலைமையில் நடந்த தேசிய ஜனநாயக முன்னணி ஆட்சியின் கடைசி மூன்று ஆண்டுகளில் இராணுவத்துக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கப்படவில்லை. அந்த இழப்பைத்தான் நாங்கள் ஈடு செய்கிறோம்" என பிரதமர் மன்மோகன் சிங், இந்தக் கூடுதல் நிதி ஒதுக்கீட்டை நியாயப்படுத்தியுள்ளார்.

ஆனால், பா.ஜ.க.வின் ஆட்சியில், 1999 தொடங்கி 2004-க்குள் இராணுவத்துக்கான நிதி ஒதுக்கீடு 53.6 சதவீதம் அதிகரித்திருப்பதாகப் புள்ளி விவரங்கள் கூறுகின்றன. பொருளாதார மேதையான மன்மோகன் சிங்குக்கு இந்தப் புள்ளிவிவரங்கள் எல்லாம் தெரியாத விசயமல்ல; இருந்தாலும், அவர் முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைக்க முட்டாள்தனமாக முயலுகிறார்.

உலக நாடுகளின் இராணுவச் செலவு பட்டியலை எடுத்துக் கொண்டால், அதில் இந்தியா, 2000-ஆம் ஆண்டில் 13-ஆம் இடத்தில் இருந்தது. 2003-ஆம் ஆண்டில் 10-ஆம் இடத்தைப் பிடித்தது. 2004-ஆம் ஆண்டில் முதல் ஐந்து இடத்திற்குத் தாவிவிடும் எனக் கூறப்படுகிறது.

இதற்கு நேர் எதிராக, உலகளாவிய அளவில் மனித வள மேம்பாட்டிற்கான தர வரிசைப் பட்டியலில், 2001-ஆம் ஆண்டு 115-ஆம் இடத்தில் இருந்த இந்தியா, 2004-ஆம் ஆண்டு 127-ஆம் இடத்திற்கு சறுக்கி விழுந்திருக்கிறது. அதாவது, சொந்த நாட்டு மக்களின் உணவு, உடை, இருப்பிடம், கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு ஆகிய அத்தியாவசிய தேவைகளுக்குச் செலவு செய்வதை விட, இராணுவத்துக்குக் கொட்டி அழுவதைத்தான் இந்திய ஆளும் கும்பல் முக்கியமானதாகக் கருதுகிறது. ஸ்டாக்ஹோம் நகரைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின்படி, இந்திய இராணுவம் மற்றும் துணை இராணுவப் படைகள் இரண்டுக்கும் சேர்த்து இந்த ஆண்டுக்கு மட்டும் ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஒரு இலட்சம் கோடிக்கும் அதிகம். இது, நாட்டின் மொத்த வரவு - செலவு கணக்கில் நான்கில் ஒரு பகுதி!

இந்தப் பூதகரமான செலவை, "நாட்டின் ஒற்றுமை - பாதுகாப்புக்கு அண்டை நாட்டில் இருந்து அச்சுறுத்தல்" என்ற தேசபக்த பஜனையைப் பாடி ஓட்டுக் கட்சிகள் அனைத்தும் நியாயப் படுத்துகின்றன; இதன் மூலம் இந்தியா மீது பாகிஸ்தான் நாளைக்கே படையெடுக்கத் தயாராக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துகிறார்கள்.

ஆனால், உண்மையான நிலைமையோ வேறு மாதிரியாக இருக்கிறது. இந்த ஆண்டு சனவரி தொடங்கியே பாகிஸ்தானுக்கும் இந்தியாவிற்கும் இடையே அமைச்சர்கள் மட்டத்திலும், அதிகாரிகள் மட்டத்திலும் அமைதி பேச்சுவார்த்தைகள் மீண்டும் நடக்கத் தொடங்கி விட்டன. இந்தியா - பாக். இடையே போர் மூளுவதற்கு உடனடியான வாய்ப்புகளோ, சூழலோ இல்லை என்பதைத்தான் இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகள் எடுத்துக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட நிலையில் இராணுவச் செலவு, முந்தைய ஆண்டைவிட ஊதிப் பெருக்க வேண்டிய அவசியம் எதனால் வருகிறது என்பதுதான் கேள்வி.

இதற்குப் பின்னுள்ள காரணம், இந்திய அரசு சொந்த நாட்டு மக்களின் மீதே ஒரு போரை நடத்தி வருகிறது என்பதுதான். உள்நாட்டிற்குள், பல்வேறு மாநிலங்களில் நிறுத்தப்பட்டுள்ள பட்டாளத்தின் எண்ணிக்கையை கணக்கிட்டுப்

**திரிபுரா மாநிலத் தலைநகர் அகர்தலாவில் தேடுதல் வேட்டை நடத்தும் இந்திய இராணுவம்.**




படிப்பகம்

www.padippakam.com

பார்த்தால், இந்த உண்மை யைப் புரிந்து கொள்ள முடி யும்.

● 22,327 ச.கி.மீ பரப்பள வும், 24 இலட்சம் மக்கள் தொகையும் கொண்ட மணிப் பூரில், அசாம் துப்பாக்கி படை யைச் சேர்ந்த 13 பட்டாலியன் கள்; மத்திய ரிசர்வ் போலீசு படையைச் சேர்ந்த 8 பட்டாலி யன்கள்; மணிப்பூர் துப்பாக்கி படையைச் சேர்ந்த 10 பட்டா லியன்கள்; இந்திய ரிசர்வ் படையைச் சேர்ந்த 4 பட்டாலி யன்கள்; இந்த துணை இராணு வப் படைகளோடு இந்திய இராணுவத்தைச் சேர்ந்த 2 பிரிகேடுகள் நிறுத்தப்பட் டுள்ளன.



பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி அரசு வேலைகளுக்கு ஆளெடுப்பதற்குப் போடப்பட்டுள்ள தடை, இராணுவத்துக்கும், போலீசுக்கும் பொருந்தாது: பஞ்சாப் பாட்டியாலாவில் நடந்த இராணுவ ஆளெடுப்புத் தேர்வு.

● ஆந்திராவில் நக்ச லைட்டுகளை வேட்டையாடு வதற்காக இரண்டு ஹெலிகாப் டர்களையும், 153 கம்பெனிக ளைக் கொண்ட துணை இராணுவப் படைகளைத் தருவதற்கு மைய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. ஆந்திராவில் ஏற்கெனவே சிறப்புப் போர் பயிற்சி பெற்ற, 17,000 போலீசாரைக் கொண்ட ''கிரே ஹெளண்ட்'' என்ற பெயர் கொண்ட சிறப்பு அதிரடிப் படை, மக் களை நரவேட்டையாடி வருகிறது.

● ஜார்கண்ட் மாநிலத்தில் 8,000 போலீசாரைக் கொண்ட சிறப்பு அதிர டிப் படையொன்றை உருவாக்கி, அவர் களுக்கு இராணுவம் மூலம் சிறப்புப் பயிற்சி அளிக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

● நக்சல்பாரி புரட்சிகர அமைப்பு கள் செயல்படும் மாநிலங்கள் அனைத் திலும் மேலும் 23 பட்டா லியன்களைக் கொண்ட மத்திய ரிசர்வ் போலீசு படையை நிறுத்த மைய அரசின் உள்துறை அமைச்சகம் முடிவெடுத் துள்ளது. இந்திய ஆயுதப் படையைச் சேர்ந்த ஒரு பட்டாலியன் படையை வைத்துக்கொள்வதற்காக, இந்த மாநிலங்கள் ஒவ் வொன்றுக்கும் 13 கோடி ரூபாய் வரை நிதியுதவி வழங்கவும் ஏற்பாடு செய் யப்பட்டுள்ளது.

● 'மார்க்சிஸ்டு'கள் ஆளும் மேற்கு வங்கத் தைச் சேர்ந்த மித்னாபூர், புருலியா, பங்குரா ஆகிய மூன்று மாவட்டங்களில் மட்டும் எல்லை பாது காப்புப் படையைச் சேர்ந்த நான்கு கம் பெனிகள்; மத்திய ரிசர்வ் போலீசு படை யைச் சேர்ந்த இரண்டு கம்பெனிகள்; கிழக்கு எல்லை துப்பாக்கி படை பிரி வைச் சேர்ந்த 350 போலீசார், நக்ச லைட்டுகளை ஒழிப்பது என்ற போர் வையில் நர வேட்டை நடத்தி வருகின்ற னர். இது போக சிறப்பு கமாண்டோ படை ஒன்றை உருவாக்கியிருக்கும் மேற்கு வங்க மாநில அரசு, மத்திய ரிசர்வ் போலீசு படையைச் சேர்ந்த 12 கம்பெனிகளை அனுப்பி வைக்குமா றும் கோரியுள்ளது.

● காசுமீரைப் பற்றிச் சொல்ல வேண்டியதேயில்லை. இராணுவம் மற் றும் துணை இராணுவப் படை களிடம் அம்மாநிலத்தை ஒப் படைத்து 14 ஆண்டுகள் ஆகி விட்டது. இம்மாநிலங்கள் தவிர, அசாம், திரிபுரா, நாக லாந்து ஆகிய மாநிலங்களி லும் இராணுவமும், துணை இராணுவமும் நிறுத்தப்பட் டுள்ளன.

இந்த இராணுவ ஆக்கிர மிப்பை நியாயப்படுத்துவதற் காக, காசுமீரிலும்; வடகிழக்கு இந்தியாவிலும் நடைபெற்று வரும் தேசிய சுயநிர்ணய உரி மைக்கான போராட்டங்களை யும்; நக்சல்பாரி புரட்சியாளர் களையும் ''பிரிவினைவாதி கள்'', ''பயங்கரவாதிகள்'' என முத்திரை குத்துகிறது இந் திய அரசு; இவர்கள் அனைவ ருக்குமே பாகிஸ்தானோடு தொடர்பு உண்டு என அவ தூறு செய்கிறது.

இந்தத் 'தீவிரவாத'ப் போராட்டங் களை ஒடுக்குவதன் மூலம், இந்திய அரசு உள்நாட்டில் யாரைப் பாதுகாக்கி றது? பொது மக்களையா?

மணிப்பூர் மாநிலத்தில் தற்பொழுது நடைபெற்று வரும் போராட்டங்கள், 'தீவிரவாதி'களை எதிர்த்து நடைபெறுகி றதா? இல்லை, இராணுவ அத்துமீறல் களை எதிர்த்து நடைபெறுகிறதா? பொதுமக்கள் தங்களின் வாழ்வுரிமைக் காகத் தன்னெழுச்சியாகத் திரண்டு போராடும்பொழுது, அவர்களை ஒடுக் குவது இந்தத் 'தீவிரவாதிகளா?' இல்லை, அரசுப் படைகளா?

உள்நாட்டு பாதுகாப்பு என்ற போர் வையில் தேசிய இன ஒடுக்குமுறை பாதுகாக் கப்படுகிறது; தனியார்ம யம் - தாராளமயம் பாது காக்கப்படுகிறது. இந்த இராணுவ ஆக்கிரமிப்பை நாடெங்கும் விரிவுபடுத்த வே இராணுவத்துக்குக் கோடி கோடியாய்க் கொட்டப்படுகிறது.

ஜம்மு - காசுமீரில் இந்திய இராணுவத்தால் கடத்திச் செல்லப்பட்டு, பின் ''காணாமல் போனவர்களின்'' உறவினர்கள் இராணுவ அட்டூழியத்திற்கு எதிராக சிறீநகரில் நடத்திய ஆர்ப்பாட்டம்.



● அழகு

*(குறிப்பு: ஒரு கம்பெனி என்பது 300 சிப்பாய்க ளையும்; பட்டாலியன் 1,000 சிப்பாய்களை யும்; பிரிகேடு 5,000 சிப்பாய்களையும் கொண்டது.)*

www.padippakam.com

# "சங்கர மடத்தை இழுத்து மூடு! சொத்துக்களைப் பறிமுதல் செய்! ஜெயேந்திரனை கிரிமினலாக நடத்து!"

## – புரட்சிகர அமைப்புகளின் சூறாவளிப் பிரச்சாரம்

கொலை வழக்கில் ஜெயேந்திரன் சிறையில் அடைக்கப்பட்டவுடன், எதிர்க் கட்சிகள், தங்கள் தரப்பிலிருந்து ஜெயேந்திரன் மீது ஒரு துரும்பும் படாமல் பாதுகாத்தன. பாதிக்கப்பட்ட பார்ப்பன கும்பல்கள், தங்கள் மீது பழிபாவங்களைச் சுமத்தி விடுமோ என்று அஞ்சி பயபக்தியுடன் ஒதுங்கிக் கொண்டன. அதுமட்டுமல்ல, 'ஜெயேந்திரன் கைது விவகாரத்தில் ஜெயலலிதா அரசு உள்நோக்கத்துடன் செயல்படுவதாக'க் கூறிய கருணாநிதி, உரிய நேரத்தில் பார்ப்பன கும்பல்களின் வயிற்றில் பாலை வார்த்தார். புற்றிலிருந்து தாங்களே வெளிப்பட்டு நெளிந்துக் கொண்டிருந்த பாம்புகளான, பார்ப்பன - பயங்கரவாதிகளை அடித்து விரட்டாமல், 'எதிர்க்கட்சிகள்' மகுடி ஊதி மகிழ்வித்தன.

ஆனால், ஓட்டுக் கட்சிகளின் அணிகளும், உழைக்கும் மக்களும் பார்ப்பன பயங்கரவாதிகளை அடித்து விரட்டுவதில் உடனடியாக, தங்களால் முடிந்த உதவிகளை செய்கிறார்கள். பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு எதிராக தெருவில் இறங்கிப் போராடும் புரட்சிகர சக்திகளுக்கு, கருத்தாலும் கரத்தாலும் பாதுகாப்பு கொடுப்பதில் துணிந்து நிற்கின்றனர்.

அன்றாட வாழ்க்கையில் அல்லலுறும் கூலி விவசாயிகளும் தொழிலாளர்களும் தங்கள் பையில் இருக்கும் கடைசி காசையும் தந்து, 'எங்களால் முடிந்த உதவி இதுதான்' என்று புரட்சிகர சக்திகளுக்குத் தோள் கொடுக்கிறார்கள். பார்ப்பன பயங்கரவாதிகளை தோலுரிக்கும் துண்டு பிரசுரங்களையும் வெளியீடுகளையும் படிப்பறிவு இல்லாத பாமரர்களும் விருப்பமுடன் வாங்கி 'இதுதான் சரியான அரசியல்' என்று அங்கீகரிக்கின்றனர்.

'மூட ஜனங்களை திருத்தவே முடியாது!' என்று கூறி தங்களுடைய பிழைப்புவாத அரசியலை மூடி மறைக்கும் ஓட்டுச் சீட்டுத் தலைமையின் ஓட்டுக் கோவணத்தையும் உருவி நடுத் தெருவில் அம்பலப்படுத்தியது, ஜெயேந்திரன் கைது விவகாரம்!

துணிந்து முன்னணிப் படையாகப் புரட்சிகர சக்திகள் மட்டுமே களத்தில் இறங்கி தமிழகம் முழுக்க பார்ப்பனப் பயங்கரவாதிகளை சிதறடித்தனர். பிரச்சாரம், கிளர்ச்சி, போராட்டம் என்று பல முனைகளில் பார்ப்பன பயங்கரவாதிகளுடன் நேருக்கு நேர் மோதினர். போலீசின் கெடுபிடி, மிரட்டல்; இழுத்தடிப்புக்களைத் தாண்டி, ''ஜெயேந்திரனைத் தூக்கிலிடு! சங்கர மடத்தை இழுத்து மூடு! சொத்துக்களை பறிமுதல் செய்!'' என்ற மைய முழக்கங்களின் கீழ் சூறாவளியாக தமிழகம் முழுக்க பிரச்சாரம் செய்து வருகின்றனர்.

### மதுரை

போலீசாரின் அச்சுறுத்தல் - தடைகளைக் கடந்து 13.12.04 அன்று சுப்பிரமணியபுரம் முத்துப் பாலம் அருகே, ''சங்கரமடத்தை இழுத்து மூடு! கொலைகார சங்கராச்சாரியைக் கிரிமினலாக நடத்து!'' என்ற தலைப்பில் ம.க.இ.க., வி.வி.மு., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் இணைந்து வீச்சான பிரச்சாரத்துடன் பொதுக் கூட்டத்தை நடத்தின.

இப்பொதுக் கூட்டத்திற்கான விளம்பர சுவரொட்டிகளை முதல் நாளன்று இரவில் ஒட்டிய தோழர்கள் ரவிகுமார், ராமலிங்கம் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். சுவரொட்டியிலுள்ள வாசகங்கள் 'இந்து'க்களின் மனதைப் புண்படுத்துவதாக இந்து முன்னணி காலிகள் கொடுத்த புகாரை ஏற்று, போலீசார் விசுவாசமாகக் கடமையாற்றினர். ஜெயலலிதா பேசினால் கருணாநிதி மனது புண்படும்; வாஜ்பாயி பேசினால் சோனியா மனது புண்படும்; நாத்திகர்கள் பேசினால் ஆத்திகர்கள் மனது புண்படும் என்பதால் யாருமே பேசக் கூடாது, எழுதக்கூடாது என்று வாய்ப்பூட்டு சட்டம் போட்டுள்ளீர்களா? என தோழர்கள் போலீசாரிடம் வாதிட்டனர். இதற்கு பதிலளிக்க முடியாமல் சுவரொட்டியில் அச்சகத்தின் பெயரைக் குறிப்பிடவில்லை என்று போலீசார் கைதுக்குப் புதுக் காரணம் கூறினர். அச்சகத்தின் முகவரி கொடுத்தும் கூட ஏற்க மறுத்து, தோழர்களை சட்டவிரோதமாகக் காவலில் வைத்து, கிரிமினல்களைப் போல புகைப்படமெடுத்து, பொதுக் கூட்ட நிகழ்ச்சி முடிந்த பின்னரே விடுவித்தனர்.

இந்த அடாவடியும் அச்சுறுத்தலும் இதோடு நிற்கவில்லை. முறையாக பொதுக் கூட்டத்திற்கு அனுமதி பெற்றிருந்த போதிலும், கூட்ட நாளன்று காலையில் தொடர்பு முகவரியிலுள்ள தோழர் செந்தில் குமாரை 'வலைவீசி' தேடிப் பிடித்து, பொதுக் கூட்டம் மட்டும்

**விழுப்புரத்தில் இந்து முன்னணி நடத்திய இந்து சமுதாயப் பாதுகாப்பு மாநாட்டை அம்பலப்படுத்தி, அந்நகரில் நடத்தப்பட்ட சுவரெழுத்துப் பிரச்சாரம்**





படிப்பகம்

தான் நடத்த வேண்டும்; கலை நிகழ்ச்சிகள் நடத்தக் கூடாது; மீறினால் கூட்ட அனுமதியை ரத்து செய் வோம் என்று மிரட்டி, கையெழுத்திட வைத்தது.

இத்தனை கெடுபிடி கள் இருந்த போதிலும், பார்ப்பன இந்துவெறிக்கு எதிராக புரட்சிகர அரசி யலை முன் வைத்து நடந்த இப்பொதுக்கூட்டம் உழைக்கும் மக்களிடம் பெருத்த வரவேற்பைப் பெற்றது. இக்கூட்டத்தில் சி.பி.எம். கட்சியைச் சேர்ந்த தோழர் விஜயரா ஜன், வி.வி.மு. தோழர் கள் குருசாமி, சிவகாமு; ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் சங்கராச்சாரி மற்றும் சங்கப் பரிவாரத்தின் முகத்தி ரையை நார்நாராகக் கிழித்தெறிந்தனர். கலைநிகழ்ச்சிகள் நடத்தத் தடைவிதிக் கப்பட்ட போதிலும், பெருந்திரளாக மக்கள் இறுதிவரை பங்கேற்று போலீ சின் முகத்தில் கரியை பூசினர்.




குடந்தையில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் சித்த மருத்துவர் தனபால்.

## திருப்பரங்குன்றம்

14.12.04 அன்று பதினாறுகால் மண்டபம் அருகில், ''கொலைகார ஜெயேந்திரனை பிணையில் விடாதே! சங்கரமடத்தை இழுத்து மூடி அதன் சொத்துக்களைப் பறிமுதல் செய்!'' என்ற முழக்கத்தின் அடிப்படையில் ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப் புகள் இணைந்து பொதுக் கூட்டத்தை நடத்தின. இக்கூட்டத்தில் ம.தி.மு.க. நகர செயலர் முருகேசன், தி.க. தலைமை நிர்வாகக் குழு உறுப்பினர் அழகர்சாமி, முற்போக்கு கவிஞர் பேர வையின் நிறுவனர் தமிழ் கூத்தனார் ஆகியோரும் உசிலை வட்ட வி.வி.மு. தோழர் சிவகாமுவும் சிறப்புரையாற்றி னர். இறுதியில் நடந்த புரட்சிகர கலை நிகழ்ச்சி, பார்ப்பன பயங்கர வாதிகளின் காவி வேடத்தைக் கலைத்து, போராட்ட உணர் வூட்டியது

## சிவகங்கை

15.12.04 அன்று அரண்ம னைவாயில் சண்மு கராஜா கலையரங் கில் ம.க.இ.க., பு.மா.இ.மு. சார் பில் புரட்சிகர முழக் கங்களுடன் பொதுக் கூட்டமும் புரட்சி கர கலைநிகழ்ச்சியும் நடந்தது. இதில் உரையாற்றிய ம.க.இ.க. மாவட்ட அமைப்பாளர் தோழர் எழில்மாறன், பா.ஜ.க.வின் எச். ராஜா தனது வாகனங் களில் 25 எடுபிடிகளை அழைத்துக் கொண்டு வந்து ஊளையிட்டுச் சென் றதை அம்பலப்படுத்தியதோடு, பார்ப் பன பயங்கரவாதிகள் தமிழகத்தைக் குஜராத்தாக்க முயற்சிக்கும் சதியை விளக்கி எச்சரித்தார். சிறப்புரையாற்றிய தோழர் காளியப்பன், காஞ்சிமடம் 2500 ஆண்டுகால தொன்மை வாய்ந்த தாகக் கதையளக்கும் பார்ப்பன கும்ப லின் மோசடியைத் திரைகிழித்துக் காட் டியதோடு, சங்கரமடம் பார்ப்பன பயங் கரவாதிகளின் கூடாரமாக உள்ளதை யும் ஆளும் வர்க்கமும் அரசு எந்திர மும் அதன் விசுவாசிகளாக உள்ளதை யும் விளக்கினார். சங்கரமடம் மற்றும் சங்கராச்சாரிகளின் யோக்கியதைகளை சந்தி சிரிக்க வைத்த கலை நிகழ்ச்சியும் நாடகமும் கூத்தும் மக்களிடையே சிறப் பானதொரு வரவேற்பைப் பெற்றது.

## பரமக்குடி

16.12.04 அன்று காந்திசிலை அருகே ம.க.இ.க., பு.மா.இ.மு. சார்பில் பொதுக் கூட்ட மும் கலை நிகழ்ச்சியும் நடைபெற்றது. இக்கூட் டத்திற்கு முதல்நாளன்று, இதே இடத்தில் அம்பேத் கர் நினைவுநாள் பொதுக் கூட்டம் நடத்திய பா.ஜ.க.வினர், ம.க.இ.க.வினர் 'மூளைச் சலவை செய்கிறார்கள்; ஏமாந்து விடாதீர்கள்' என்று உபதேசம் செய்த னர். இதற்குப் பதிலளிக் கும் வகையில் பார்ப்பன கும்பல் சூத்திர - பஞ்சம மக்களின் மூளையை அழுக்கேற்றி வைத்துவிட்டதால், நாங்கள் மூளைச் சலவை செய்வது அவசியமான பணியே என்று உரையாற்றிய தோழர் கள் குறிப்பிட்டதோடு, மட சங்கராச்சா ரியைக் கிரிமினலாக நடத்தாமல் சிறப் புச் சலுகைகள் வழங்கப்படுவதை எதிர்த்தும், சங்கரமடத்தின் பார்ப்பன பாசிசத்தையும் தோலுரித்துக் காட்டி னர். நாடகம், கூத்து உள்ளிட்ட கலைநி கழ்ச்சிகளைப் பார்த்த உழைக்கும் மக் கள் மட்டுமின்றி, போலீசு அதிகாரிகள் கூட மெய்மறந்து கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

திருச்சி – உறையூர் பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தினைக் காணத் திரளாக வந்திருந்த மக்கள் கூட்டத்தின் ஒரு பகுதி.



## திருச்சி

17.12.04 அன்று உறையூர் கடைவீ தியில் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகளின் சார்பில் பொதுக்கூட்டமும் கலைநிகழ்ச் சியும் நடத்தப்பட்டன. மட சங்கராச்சா ரியின் 'ஆன்மீகத்தை' அங்குலம் அங்கு லமாக அம்பலப்படுத்திய இக்கூட்டத் தில், சிறப்புரையாற்றிய தோழர் காளி யப்பன், சாதாரண ஒரு விசாரணைக் கைதியை போலீ சார் நடத்தும் விதத் தையும் கொலை கார ஜெயேந்தி ரனை நடத்தும் விதத்தையும் ஒப் பிட்டு, அரசு எந்தி ரத்தின் பார்ப்பன விசுவாசத்தை திரை கிழித்துக் காட்டி னார். அதைத் தொடர்ந்து, சிறைக் குள் சங்கராச்சாரி - பிரேமானந்தா சந் திப்பு என்ற நாடகத் தைக் கண்டு வயிறு குலுங்க சிரித்த மக் கள், அதை முழு

www.padippakam.com

மையாக கண்டு ரசிக்க மேடையைச் சூழ்ந்து கொண்டனர். துண்டு ஏந்தி நன்கொடை கோரிய தோழர்களிடம், பொதுமக்கள் பேருற்சாகத்துடன் கூப்பிட்டு கொடுத்து தாராளமாக நிதியுதவி செய்து, இச்சரியான புரட்சிகர அரசியலை ஆதரித்தனர்.

திருச்சி காட்டூர், திருவெறும்பூர் பகுதிகளில் டிசம்பர் 7,8 தேதிகளில் பிரச்சாரமும் தெருமுனைக் கூட்டங்களும் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றன. சங்கராச்சாரி போல் வேடமணிந்த ஒரு தோழருக்கு செருப்பு மாலை போட்டு அடித்து இழுத்துச் சென்றபடியே சங்கராச்சாரியை கொலைகாரனாகச் சித்தரிக்கும் பெரிய தட்டிகளுடன் ஊர்வலமாக பிரச்சாரம் செய்யப்பட்டதால், மக்கள் எங்கெங்கும் இதைப் பற்றியே பேசினர். காட்டூரில் நடந்த தெருமுனைக் கூட்டத்தில் பெருந்திரளான உழைக்கும் மக்கள் கூடி இப்புரட்சிகர அரசியல் பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்ததோடு நன்கொடை அளித்தும் ஊக்குவித்தனர்.

திருவெறும்பூரில் டிசம்பர் 8-ஆம் தேதி மாலையில் பேருந்து நிலையம் அருகே, கொலைகார சங்கராச்சாரியைப் பிணையில் விடாதே! கிரிமினலாக நடத்து! சங்கரமடத்தை இழுத்து மூடி சொத்துக்களைப் பறிமுதல் செய்!'' என்ற மையமுழக்கங்களுடன் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. நெடுஞ்சாலையை அடைக்கும் விதமாக மக்கள் பெருந்திரளாகக் குழுமி இறுதிவரை கலையாமல் நின்று புரட்சிகர அரசியல் பிரச்சாரத்தை வரவேற்று ஆதரித்து நன்கொடைகள் அளித்து உற்சாகப்படுத்தினர்.

திருச்சி, உருமு தனலெட்சுமி கல்லூரி நுழைவாயிலருகே, டிசம்பர் 14-ஆம் தேதியன்று காலையில் பு.மா.இ.மு. சார்பில் ''பார்ப்பன பயங்கரவாதிகளின் கூடாரமே சங்கரமடம்'' என்ற தலைப்பில் வாயிற்கூட்டம் நடைபெற்றது. சூத்திரர்களை வேசி மக்கள் என்றும் தாய்மொழியாம் தமிழை நீசபாஷை என்றும் பார்ப்பன கும்பல் இழிவுபடுத்துவதையும், தீண்டாமை ஷேமகரமானது; வேலைக்குப் போகும் பெண்கள் நடத்தை கெட்டவர்கள் என்று மட சங்கராச்சாரிகள் திமிராகக் கொக்கரிப்பதையும் எதிர்த்தும், சங்கரமட கல்வி நிறுவனங்களில் பிற சாதியினருக்கு ''தனிப் பந்தி''யைப் பின்பற்றுவதை அம்பலப்படுத்தியும் முன்னணியாளர்கள் உரையாற்றினர்.

மாணவர்களின் கல்வி உரிமை பறிப்பு, தேர்வுக் கட்டண உயர்வு, தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளின் அவலம் முதலானவற்றுக்கு எதிராகப் போராட முன்வராத ஏ.பி.வி.பி., பா.ஜ.க உள்ளிட்ட மத வெறி அமைப்புகள், கொலைகார கிரிமினல் சங்கராச்சாரிக்கு ஆதரவாக போராட்டம் நடத்துவதை அம்பலப்படுத்தியும், புரட்சிகர அரசியல் பிரச்சாரமாகவும் இக்கூட்டம் நடைபெற்றது. மாணவ - மாணவிகள் திரளாகக் கூடி இறுதிவரை நின்று ஆதரித்ததோடு, தாங்களும் இக்கருத்துக்களைப் பிரச்சாரம் செய்வதாக உறுதியளித்தனர்.

## சிவகாசி

18.12.04 அன்று பொதுக்கூட்டமும், மையக் கலைக் குழுவின் கலை நிகழ்ச்சிகளும் எழுச்சியுடன் நடந்தது. பல்வேறு அரசியல் கட்சிகளின் உள்ளூர் தலைவர்கள், உணர்வுபூர்வமாக, பார்ப்பன பயங்கரவாதிகளுக்கு எதிராக புரட்சிகர சக்திகளுடன் இணைந்தது, பகுதி மக்களிடம் பெரும் உத்வேகத்தை ஊட்டியது.

விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் செல்வராஜ், புதிய தமிழகம் அமைப்பின் முருகன், திராவிடர் கழகம் அமைப்பின் மணியம் மற்றும் ம.க.இ.க. தோழர் கதிரவன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

## விழுப்புரம்

18.12.04 அன்று பார்ப்பன பயங்கரவாதிகள், விழுப்புரத்தில் 'இந்து சமுதாய பாதுகாப்பு மாநாடு' என்று நாள் குறித்தனர். இதற்கு எதிராக, விழுப்புரம் பு.மா.இ.மு. மற்றும் திருவெண்ணெய்நல்லூர் வட்டார வி.வி.மு. அமைப்பினரும் களத்தில் இறங்கினர். ''இந்து என்ற பெயரில் ஆரிய - பார்ப்பன சாம்ராஜ்ய கனவை நிறுவ முயலும் பி.ஜே.பி.; இந்து முன்னணி, ஆர்.எஸ்.எஸ்., வி.எச்.பி., பஜ்ரங்தள் கும்பல்களை மோதி வீழ்த்துவோம்'' என்று மக்களிடம் வீச்சாக பிரச்சாரத்தை எடுத்துச் சென்றனர். கொலைவெறியன் சங்கராச்சாரியின் குற்றத்தை மறைப்பதற்கு இவர்கள் 'இந்து' முகமூடி போட்டுள்ளனர் என்று அம்பலப்படுத்தி, சுவரெழுத்து, சுவரொட்டிகள், தட்டிகள் என்று பல வடிவங்களில் பிரச்சாரம் சுழன்றடித்தது. மாநாட்டை தடை செய்யக் கோரி எழுந்த புரட்சிகரப் போராட்டம், பார்ப்பன பயங்கரவாதிகளிடம் பீதியை ஏற்படுத்தியது. ''ம.க.இ.க.வும், பு.மா.இ.மு.வும்தான் முதல் எதிரிகள்''




தமிழக மக்களின் பெரும் பாராட்டைப் பெற்று வரும் ''சிறைக்குள் ஜெயேந்திரன் - பிரேமானந்தா சந்திப்பு'' நாடகத்தின் ஒரு காட்சி.


படிப்பகம்

www.padippakam.com




சென்னை - எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் நடந்த பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் பேராசிரியர் பெரியார்தாசன்.

என்று இராம.கோபாலன் கும்பல்கள் மாநாட்டில் ஊளையிடுமளவு குலைநடுக்கத்தை ஏற்படுத்தியது.

## திருநெல்வேலி: பாளையங்கோட்டை

19.12.04 அன்று மார்க்கெட் ஜவஹர் திடலில் 1000-க்கும் மேற்பட்டோர் கூடிய பொதுக் கூட்டம் சிறப்பாக நடந்தது. அடித்தட்டு மக்களுடன் சேர்ந்து ஓரணியில் நின்ற கல்லூரி பேராசிரியர்கள், வழக்கறிஞர்கள், மாணவர்கள், முற்போக்கு அமைப்பினர், சிறுபான்மை சமூகத்தினர் மற்றும் எழுத்தாளர்கள் களத்திலும் கருத்திலும் முன்னணியாக நின்றனர்.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தூத்துக்குடி மாவட்டச் செயலர் தோழர் பால்ராசு மற்றும் சிவகங்கை பகுதி ம.க.இ.க. அமைப்பாளர் தோழர் எழில்மாறன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சிக்கு முத்தாய்ப்பாக, ம.க.இ.க. மையக் கலைக் குழுவின் புரட்சிகர கலைநிகழ்ச்சி அமைந்தது.

## குடந்தை

20.12.2004 அன்று 2000-க்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்புடன் பிரமாண்ட பொதுக்கூட்டம் நடந்தது. சமீப காலத்தில் நடந்த குடந்தையின் மாபெரும் பொதுக்கூட்டம் இது!

இக்கூட்டத்தில் வழக்குரைஞர் விவேகானந்தன், சித்த வைத்தியர் தனபால் மற்றும் ம.க.இ.க.வின் மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் ஆகியோர் எழுச்சியுடன் உரையாற்றினர்.

மையக் கலைக்குழுவின் "சங்கராச்சாரி - பிரேமானந்தா சிறையில் சந்திப்பு" என்ற மேடை நாடகம் பார்வையாளர்களிடம் பெரும் சிரிப்பலையையும் ஆரவாரத்தையும் ஏற்படுத்தியது.

## சென்னை

கடந்த இரு மாதங்களாக சுவரொட்டிகள், துண்டுப் பிரசுரங்கள், தட்டிகள், தெருமுனைக் கூட்டங்கள் வாயிலாக பிரச்சார இயக்கத்தை நடத்திவரும் ம.க.இ.க., பு.மா.இ.மு., பு.ஜ.தொ.மு ஆகிய அமைப்புகள், பொதுக் கூட்டம் நடத்த போலீசாரிடம் பலமுறை அனுமதி கோரி, இழுத்தடிக்கப்பட்டு, தொடர்ந்து முயற்சித்து அனுமதி பெற்று டிசம்பர் 25 அன்று எம்.ஜி.ஆர். நகரில் சிறப்பானதொரு பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சியை நடத்தின.

இக்கூட்டத்தில் உரையாற்றிய பெரியார் தி.க.வின் பொதுச் செயலாளர் தோழர் விடுதலை இராசேந்திரன், சங்கரமடம் 2500 ஆண்டுகால தொன்மை வாய்ந்தது என்ற பார்ப்பனப் புளுகை, பல்வேறு வரலாற்று ஆதாரங்களோடு அம்பலப்படுத்தினார். 'நாமெல்லாம் இந்து' என்று ஏய்த்து தமிழகத்தைக் குஜராத்தாக்கத் துடிக்கும் பார்ப்பன பயங்கரவாதிகளின் சதியை தோலுரித்துக் காட்டினார், ம.க.இ.க. மாநில செ.கு. உறுப்பினர் தோழர் கதிரவன். அடுத்து உரையாற்றிய பேரா.பெரியார்தாசன், தனக்கே உரித்தான நையாண்டி பாணியில் சங்கரமடம் - சங்கராச்சாரிகளின் யோக்கியதைகளை திரைகிழித்துக் காட்டி, சங்கரமடத்தை இடிக்க வேண்டும் என்று பலத்த கரவொலிக்கிடையே அறைகூவல் விடுத்தார்.

ம.க.இ.க.வின் புரட்சிகர கலை நிகழ்ச்சியும் குறிப்பாக, சிறையில் சங்கராச்சாரி - பிரேமானந்தா சந்திப்பு எனும் நாடகமும் பெருத்த வரவேற்புடன் புரட்சிகர அரசியல் பிரச்சாரத்துக்கு வலுவூட்டியது. பெருந்திரளாக உழைக்கும் மக்கள் இப்பொதுக் கூட்டத்தில் பங்கேற்று ஆதரித்ததோடு, தாராளமாக நன்கொடை அளித்தும் ஊக்குவித்தனர். ●

தலையங்கம் தொடர்ச்சி

நீடிக்கும் கொடூரங்கள் பல காலம் நிலைத்திருக்கக் கூடியவை. கடலைகள் கரையைத் தாக்கி பல மணிநேரமாகியும் ஆட்சியாளர்கள் விழித்துக் கொண்டு தமது கவனத்தைச் செலுத்தவில்லை. புயல், நிலநடுக்கம், வெள்ளம் என்று இயற்கைப் பேரழிவுகள் இங்கு நடப்பது புதிதல்ல. அவை நேரும்போது உடனடியாகத் தலையீடு செய்து மீட்பு - நிவாரணப் பணிகளில் ஈடுபடுவதற்கென்றே இராணுவம் உள்ளிட்டு பல அரசு அமைப்புகளும் நிதியும் இருக்கின்றன. ஆனால் பேரழிவுத் தாக்குதல் நடந்து 24 மணி நேரமாகியும் இவை எதுவுமே அவசர கதியில் மீட்பு - நிவாரணப் பணிகளில் ஈடுபடுத்தப்படவில்லை. மூன்று, நான்கு நாட்கள் ஆகியும் மீட்பு - நிவாரண அமைப்புகள் பல பகுதிகளைச் சென்றடையவே இல்லை. பொதுமக்கள் தாம் தன்முனைப்பாகப் பிணங்களை மீட்கும் வேலையில் ஈடுபட்டனர். பல நாட்களாகியும் சேற்றிலே புதைந்த பிணங்கள், கடலிலிருந்து கரையொதுங்கும் பிணங்கள் கேட்பாறின்றி அழுகிக் கொண்டிருந்தன. உயிர் பிழைத்தோரின் அவலமோ இன்னும் மோசமாயிருக்கின்றது; உண்ண உணவில்லை, மருந்தில்லை, உடுத்த மாற்றுத் துணியில்லை, மார்கழி மாதக் குளிரில் திறந்த வெளியில் நடுங்கிக் கொண்டு சொந்த நாட்டிலேயே அனாதைகளாய், அகதிகளாய் இலட்சக்கணக்கானோர், அழுகிய பிணங்களால் பரவும் நோயோடு, கடல் நீர் நஞ்சாக்கிவிட்ட தண்ணீரைக் குடித்துக் கொண்டு உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, தாங்களும் உற்றார் உறவினரோடு மாண்டு போயிருக்கக் கூடாதாவென்ற வெறுப்பில் வாழ்கிறார்கள்.

அரசு, நிவாரணங்களை அறிவித்தாலும் அவற்றை உரிய முறையில் பெற்றுக் கொள்ளும் வழிவகையை அறியாத மக்கள் ஒருபுறம். மறுபுறம், நிவாரணப் பொருட்களைக் கொள்ளையிடவும், நிவாரணத் தொகைகளைச் சுருட்டிக் கொள்ளவும், குடியிருப்பு, சாலை அமைப்பு போன்ற மறுவாழ்வுப் பணிகளில் இலாபமீட்டவும் ஆளும் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்கள், அதிகாரிகள், அமைச்சர்கள், இடைத்தரகர்கள், ஒப்பந்தக்காரர்கள் என்று ஒரு பெரிய கழுகுக் கூட்டம் பேரழிவுகள் நேர்ந்த பகுதிகளை வட்டமிடுகின்றது. பேரழிவுகளால் வாழ்விழந்த மக்களின் அவலங்கள் துயரங்களை, இறந்தவர்களுக்கான ஒப்பாரியில் மூழ்கடிக்கும் வேலையைத்தான் இந்தப் பிணந்தின்னிக் கூட்டம் செய்கிறது. ●


படிப்பகம்

www.padippakam.com

கட்டைக் கால்களை ஊன்றி தட்டுத் தடுமாறி நடக்கிறானே, இந்தச் சிறுவன்... இவன் இளம்பிள்ளை வாத நோயினால் பாதிக்கப்பட்டவன் அல்ல. விபத்தினால் கால்கள் நசுங்கி நடக்க முடியாமல் போனவனும் அல்ல. எட்டு வயதாகும் அந்தச் சிறுவன் பிறந்ததிலிருந்தே அவனது கால்கள் இப்படி வளைந்து நடக்க முடியாமல் போய் விட்டன. இவனது பக்கத்து வீட்டுச் சிறுவனுக்கோ கைகளும் கால்களும் சூம்பிப் போய், முகமே விகாரமாகி வேதனைப்படுகிறான். அவன் வாழும் அடல்அயூப் நகரில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் கண்கள் பிதுங்கி, வாய்கோணலாகி, கை - கால்கள் சூம்பி, தலைவீங்கிய தோற்றத்துடன் காணப்படுகிறார்கள். துள்ளித் திரிய வேண்டிய பருவத்தில் அவர்கள் துவண்டு கிடக்கிறார்கள். குழந்தைகள் மட்டுமல்ல; பெரியவர்கள் உள்ளிட்டு ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் இப்படி உடல் விகாரமாகி தீராத நோயுடன் தத்தளிக்கிறார்கள்.

வேதனையும் துயரமும் அவர்களை வாட்டிய போதிலும் அவர்களது கண்களில் கோபம் கொப்பளிக்கிறது. நெஞ்சிலே வெஞ்சினத்தோடு ''கொலைகாரன் ஆண்டர்சனைக் கைது செய்!'' என்று அவர்கள் முழங்குகிறார்கள். கடந்த டிசம்பர் 2-ம் நாளன்று பல்லாயிரக்கணக்கானோர் போபால் நகரில் திரண்டு கொலைகார ஆண்டர்சனின் கொடும்பாவியை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அன்று போபால் படுகொலையின் 20-ஆம் ஆண்டு நினைவு நாள்!

உங்களுக்கு நினைவிருக்கிறதா? 1984-ஆம் ஆண்டு டிசம்பர் 2-ஆம் நாள், நள்ளிரவு 12 மணி 5 நிமிடங்கள். ம.பி. மாநிலத்தின் தலைநகரான போபாலில் அமெரிக்க நச்சு இரசாயன யூனியன் கார்பைடு ஆலையிலிருந்து, ''மிதைல் ஐசோசயனேட்'' என்ற கொடியை நச்சுவாயு டன் கணக்கில் வெளியேறியது.



# போபால்:
# அவமானத்திற்கு பழிதீர்ப்பது எப்போது?

யூனியன் கார்பைடு ஆலையைச் சுற்றியுள்ள சேரிப் பகுதிகளில் கடுங்குளிர் வீசும் அந்தப் பின்னிரவில் உழைப்பாளர் குடும்பங்கள் உறக்கத்தில் ஆழ்ந்திருந்தன. வீடுகளின் கதவுகள் மூடிய படி இருக்க, யாரோ உள்ளே நுழைந்தார்கள்... நெஞ்சை அழுத்தி சம்மடியால் அடிப்பதுபோல, மூச்சை அடைத்ததுபோல அவர்கள் திணறினார்கள். கண்களைத் திறந்து யார் என்று பார்ப்பதற்குள் யாரோ கண்களைக் குத்திக் கிழிப்பது போல் இருந்தது. ஓவென்று அலறினார்கள். ஓயாத இருமலுடன் இரத்த வாந்தி எடுத்துச் சரிந்தார்கள். அவ்வளவுதான். அரை மணி - ஒரு மணி நேரத்திற்குள் எல்லாம் முடிந்து பிணமாகி வீழ்ந்தார்கள்.

அருகே படுத்திருந்த தமது குழந்தைகளும் உறவினர்களும் தம் கண்ணெதிரே மூச்சுத் திணறி செத்த கொடுமையைக் கண்டு குமுறி அலறும் தாய்மார்கள்; பெற்றோரைப் பறிகொடுத்து, காப்பாற்ற யாருமில்லாமல் உடலெங்கும் தீயாய் எரிக்க துடிதுடித்த குழந்தைகள்; பாதிக்கப்பட்டோரை மருத்துவமனைக்குத் தூக்கிக் கொண்டு ஓடிய இளைஞர்கள்; வழியிலேயே அவர்கள் சுருண்டு விழுந்து மாண்டுபோன அவலம்; வழியெங்கும் பிணங்கள்; மருத்துவமனை வாயிலருகே ஆயிரக்கணக்கில் மக்கள் கூட்டம். மருத்துவர்கள் அவசர சிகிச்சை அளிப்பதற்குள் மூச்சுத் திணறி வாயிலே நுரைதள்ள மாண்டு போனவர்கள் ஏராளம். எங்கும் மரண ஓலம். போபால் நகரின் மீது குண்டு வீச்சுத் தாக்குதல் நடந்ததுபோல இருந்தது. எங்கெங்கும் பிணங்கள், ஆடு-மாடுகள், நாய்கள், பூனைகள், பறவைகள் கூட செத்துக் கிடந்தன. அந்த கொடிய இரவில் ஒரு மணி நேரத்துக்குள் ஏறத்தாழ 3000 பேர் மாண்டு போயினர். அடுத்த இரு நாட்களில் 2,000-க்கும் மேலானோர் இந்நச்சு வாயுவுக்குப் பலியாகினர். நகரெங்கும் பிணவாடை வீசியது.

நச்சு வாயு தாக்குதலால் பாதிக்கப்பட்டோருக்கு என்ன நச்சு முறிவு மருந்து தரப்படவேண்டும் என்பதைக் கூட யூனியன் கார்பைடு தெரிவிக்கவில்லை. மருத்துவர்கள் தமக்குத் தெரிந்த சிகிச்சை முறைகளைக் கொண்டு பாதிக்கப்பட்டோரைக் காப்பாற்றப் போராடினர். ஒருவரல்ல; இருவரல்ல. ஏறத்தாழ 50,000 பேர் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்தார்கள்.

இந்த வெகுஜன படுகொலையை ''விபத்து'' என்று ஆட்சியாளர்கள் பூசி மெழுகினர். இறந்தவர்கள் 200 முதல் 400 பேர் தான் என்று கூசாமல் புளுகினர். யூனியன் கார்பைடு ஆலையின் தலைமை நிர்வாகியான கொலைகாரன் வாரன் ஆண்டர்சனை பத்திரமாக அமெரிக்காவுக்கு விமானத்தில் அனுப்பி வைத்தது அன்றைய ராஜீவ்


படிப்பகம்

www.padippakam.com

அரசு. ஆலையை இழுத்து மூடி விசாரணை நாடகமாடியது.

உலகிலேயே மிகப் பெரிய இரசாயன ஆலை விபத்து என்று கூறப்படும் போபால் விஷ வாயு படுகொலையில் 5000 பேர் மாண்டு போயினர். உலகை உலுக்கிய இந்தத் துயரம் 1984 டிசம்பர் 2-3 தேதிகளோடு முடிந்து விட்டதா? இல்லை. ஏறத்தாழ 5.5 லட்சம் பேர் அவர்களது வாழ்நாள் முழுவதும் முடமாகிப் போனார்கள். நுரையீரல்களில் நீர்கோர்த்து ஓயாத இருமலுடன் இரத்தம் கக்கி இன்னமும் செத்துக் கொண்டிருக்கிறார்கள். உயிர் பிழைத்தவர்களுக்கு சதைக்கோளங்களாக குழந்தைகள் பிறக்கின்றன. ஓரளவு முழுமையாகப் பிறந்த குழந்தைகளும் நாளடைவில் முடமாகி முகம் விகாரமாகி நோய் வாய்ப்பட்டு மாண்டு போகின்றன. இன்னமும் அவர்களது தீராத நோய்களுக்கு முறையான சிகிச்சை அளிக்கப்படவில்லை. தலைமுறை தலைமுறையாக அவர்களது எதிர்காலம் இருண்டு கிடக்கிறது.

போபால் படுகொலைக்கு சாட்சியமாய் நிற்கும் யூனியன் கார்பைடு ஆலையைச் சுற்றியுள்ள 18 சேரிப் பகுதிகளில் ஆய்வு செய்த பல்வேறு சுற்றுச் சூழல் அமைப்புகளும், பசுமை அமைதி இயக்கமும் இப்பகுதியின் நிலத்தடி நீர் கொடிய நச்சு இரசாயனக் கழிவுகளைக் கொண்டுள்ளது என்றும் அதை எந்த வகையில் பயன்படுத்தினாலும் உயிருக்கே ஆபத்தானது என்றும் எச்சரித்துள்ளன. ஆனாலும் அப்பகுதி வாழ் மக்களுக்கு குடிநீர் வழங்கக் கூட ஆட்சியாளர்கள் முன்வரவில்லை. பல முறை போராடிய பிறகு 2000-வது ஆண்டிலிருந்து 4 சேரிப் பகுதிகளுக்கு மட்டுமே நகராட்சி தண்ணீர் லாரி வருகிறது. அரைகுறையாக விநியோகிக்கப்படும் அந்தத் தண்ணீரைப் பிடிக்க அம்மக்கள் அன்றாடம் குடங்களுடன் ஆலாய்ப் பறக்கிறார்கள். இதர சேரிப் பகுதிகளுக்கு இன்று வரை நகராட்சி குடிநீர் வழங்கப்படுவதில்லை. இம்மக்கள் வேறுவழியின்றி தமது பகுதிகளிலுள்ள நஞ்சாகிப் போன கிணற்று நீரைத்தான் குடிக்கிறார்கள்.

யூனியன் கார்பைடு ஆலை மூடிக் கிடக்கிறது. ஆனால், ஏற்கனவே அங்கு குவிக்கப்பட்டிருந்த நச்சு இரசாயன பொருட்களாலும், ஆலை இயங்காததால் வெளியேற்றப்படாமல் தேங்கிக் கிடக்கும் நச்சுக் கழிவுகளாலும் அந்தப் பகுதியின் நிலமும் நீரும் காற்றும் நஞ்சாகிப் போயுள்ளது. 1988 ஜூலையில் யூனியன் கார்பைடு நிறுவனம் இந்த ஆலையை மைய அரசிடம் ஒப்படைத்தபோது, அங்கு 8000 டன் நச்சுக் கழிவுகள் குட்டையாகத் தேங்கிக் கிடந்தன. அமெரிக்க நீதிமன்றத்தில் நடந்த விசாரணையின்போது, யூனியன் கார்பைடு நிறுவனமானது அங்கு 1900 டன் நச்சு இரசாயனப் பொருட்களைக் குவித்திருந்தது தெரிய வந்தது. இத்தகைய கொடிய இரசாயனப் பொருட்களாலும் ஆலைக் கழிவுகளாலும் நிலமும் நிலத்தடி நீரும் நஞ்சாகி விட்டதாக பசுமை அமைதி இயக்கம் தனது ஆய்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

2001-ஆம் ஆண்டில் யூனியன் கார்பைடு நிறுவனத்தை மற்றொரு அமெரிக்க ஏகபோக நிறுவனமான ''டோவ் கெமிகல்ஸ்'' வாங்கியது. இந்த நிறுவனம், வியட்நாம் போரின்போது அமெரிக்க இராணுவத்துக்கு நச்சு இரசாயன குண்டுகளைத் தயாரித்துக் கொடுத்த கொலைகார நிறுவனமாகும். இந்த நிறுவனமும் மூடிக் கிடக்கும் ஆலையில் தேங்கிக் கிடக்கும் நச்சு இரசாயனக் கழிவுகளை அகற்ற முன்வரவில்லை. ஆலையைச் சுற்றியுள்ள சேரி வாழ் மக்களுக்குக் குடிநீர் வழங்கவும் ஏற்பாடு செய்யவில்லை.

2001-இல் ஒரு கனடா நாட்டு நிறுவனம் யூனியன் கார்பைடு ஆலையில் குவிந்துள்ள நச்சுக் கழிவுகளை அகற்றி தூய்மைப்படுத்த ஏறத்தாழ ரூ. 200 கோடி செலவாகும் என்று மதிப்பீட்டு



உயிர் தப்பிக்க ஓடும்பொழுதே, விஷவாயு தாக்கி, மூச்சடைத்து நடுத்தெருவிலேயே இறந்து போனவர்கள். (கோப்புப் படம்)


படிப்பகம்

www.padippakam.com




**யூனியன் கார்பைடு நிறுவனத்தின் தலைவராக இருந்த வாரன் ஆண்டர்சனைக் கைது செய்யக் கோரி போபால் நகரில் நடந்த ஆர்ப்பாட்டம்.**

அறிக்கை கொடுத்தது. 'நச்சுக் கழிவுகளை அகற்றப் போவதாக அறிவித்த ம.பி. மாநில அரசு இதற்காக ஆசிய வளர்ச்சி வங்கியிடம் கடன் வாங்கவும், கடனையும், வட்டியையும் மக்கள் வரிப்பணத்திலிருந்து செலுத்தவும் முடிவு செய்தது. இந்த அயோக்கியத்தனமான முடிவை எதிர்த்து போபால் மக்களும் சுற்றுச் சூழல் - மனித உரிமை அமைப்புகளும் போராட்டத்தில் குதித்தனர். ''நச்சுக் கழிவுகளை யூனியன் கார்பைடும் டோவ் கெமிக்கல்ஸ் நிறுவனமும்தான் அகற்றுவதற்குப் பொறுப்பேற்க வேண்டும்; அரசு இதற்கு உத்தரவிட்டு செயல்படுத்த வேண்டும்; கொலைகார அமெரிக்க நிறுவனங்களால் ஏற்பட்ட பேரழிவுகளுக்கு மக்களிடமிருந்து வழிப்பறி செய்வது இயற்கை நீதிக்கே எதிரானது; அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து நச்சுக் கழிவுகளை அகற்ற நிதியை வாங்கு!'' என்ற கோரிக்கையுடன் போராடினர்.

இது தொடர்பான வழக்கை விசாரித்த அமெரிக்காவின் நியூயார்க் நீதிமன்றம், ''ஆலை இந்திய அரசிடம் உள்ளது. இந்திய அரசு அனுமதித்தால், டோவ் கெமிகல்ஸ் நிறுவனம் கழிவுகளை அகற்றலாம்'' என்று கூறியது.

ஆனால், இந்திய அரசோ இன்னமும் சொரணையின்றிக் கிடக்கிறது. யூனியன் கார்பைடு நிறுவனத்தின் அப்போதைய கொலைகார தலைமை நிர்வாகி வாரன் ஆண்டர்சனை இந்திய அரசிடம் மீண்டும் ஒப்படைக்கவும் அமெரிக்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதற்கெதிராகவும் இந்திய ஆட்சியாளர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது இந்திய அரசுத் துறை நிறுவனமான இந்தியன் ஆயில் கார்ப்பரேசனும் டோவ் கெமிக்கல்ஸ் நிறுவனமும் ஒரிசாவின் பாரதீப் துறைமுகத்தில் எண்ணெய் - எரிவாயு பணிகளில் கூட்டுச் சேர்ந்துள்ளன. இந்தத் துரோகத்தைப் பற்றி எந்த ஓட்டுக் கட்சியும் வாய் திறக்கவுமில்லை.

போபால் விஷ வாயு தாக்குதலால் கொல்லப்பட்டோருக்கும் பாதிக்கப்பட்டோருக்கும் சேர்த்து யூனியன் கார்பைடு நிறுவனம் 470 மில்லியன் டாலர் நிவாரணமாக வழங்க வேண்டுமென 1989-இல் உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது. இப்போது அந்தத் தொகை, வட்டியோடு சேர்த்து 700 மில்லியன் டாலராக பெருகியுள்ளது. இதில் 335 மில்லியன் டாலர் அளவுக்கான தொகை மட்டுமே ரிசர்வ் வங்கி மூலம் விநியோகிக்கப்பட்டது. எஞ்சிய தொகை அனைத்தையும் உடனடியாக வழங்குமாறு கடந்த ஜூலையில் உச்சநீதி மன்றம் உத்திரவிட்டுள்ளது. இதன்படி, விஷவாயுத் தாக்குதலால் தலைமுறை தலைமுறையாகப் பாதிக்கப்பட்டுள்ள ஏறத்தாழ 5.5 லட்சம் பேருக்கு மொத்தத்தில் ரூ. 60,000 வரை கிடைக்கும். அதாவது, கடந்த 20 ஆண்டுகளில் இவர்களுக்கு மாதம் ரூ. 250 என்ற அளவுக்கே நிவாரணம் கிடைத்துள்ளது.

இந்த அற்ப தொகையில்தான் அவர்கள் உயிர்வாழ வேண்டும்; சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்; குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டும். தமது வாரிசுகள் நோயாளிகளாகப் பிறந்தாலும் இந்தத் தொகையைக் கொண்டு அவர்களைப் பராமரிக்கவும் வேண்டும். அரசாங்கமோ விஷவாயுத் தாக்குதலால் தொடரும் நோய்களுக்கு எவ்வித சிறப்புச் சிகிச்சையும் அளிக்காது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மறுவாழ்வுக்கான ஏற்பாடுகளோ, ஆரோக்கியமான குடியிருப்புகளோ அமைத்துத் தராது. ஆலையைச் சுற்றியுள்ள நச்சுப் பகுதியிலேயே அவர்கள் கிடந்து அல்லற்படவேண்டும். நிலத்தடி நீர் நஞ்சாகிப் போனாலும், அதைத்தான் அம்மக்கள் குடிக்க வேண்டும்!

உலகில் எந்த நாட்டுக்காவது, எந்த மக்களுக்காவது இப்படியொரு அநீதியும், அவமானமும் புறக்கணிப்பும் நேர்ந்துள்ளதா? எந்த நாட்டு மக்களாவது இப்படித் தமது சொந்த சகோதரர்களைப் பரிதவிக்க விட்டுள்ள அவலம் நிகழ்ந்துள்ளதா? தெரியவில்லை. ஆனால் மானமும் சொரணையுமுள்ள உழைக்கும் மக்கள் இந்த அநீதிக்கும் அவமானங்களுக்கும் பழிதீர்க்காமல் விட்டதில்லை என்பதுதான் வரலாறு.

படுகொலைக்குரிய தண்டனை, மரண தண்டனைதான். கொலைகார அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களின் கைக்கூலிகளான இந்திய ஆட்சியாளர்களும் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டு, விசாரணைக்குப் பிறகு மரண தண்டனை விதிக்கப்பட்டு அதே போபால் நகரில் பொதுக் கல்லறையில் புதைக்கப்படுவார்கள். நாளைய தலைமுறையினர் அக்கல்லறை மீது காறி உமிழ்ந்து அவமானப்படுத்துவார்கள். நாளைய புரட்சியின் வரலாறு முழுக்கவும் இது நடக்கும். அப்போதுதான் இந்த அநீதியும் அவமானங்களும் துடைக்கப்படும்.

● பாலன்


படிப்பகம்

www.padippakam.com

## பெருகி வரும் நவீன சொகுசு கார்கள்:

# பொருளாதாரப் புற்று நோய்

“ஃபோர்டு - ஹுண்டாய் கார் கம்பெனிகளைத் தமிழகத்திற்குக் கொண்டு வந்தது யார்? யாருடைய ஆட்சியில் அந்நிய மூலதனம் தமிழகத்திற்கு அதிகமாக வந்தது?'' - இப்படியொரு பட்டிமன்ற லாவணி தமிழகத்தின் முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கும், இந்நாள் முதல்வர் ஜெயாவுக்கும் இடையே ஒரு மாதத்திற்கு முன்பாக நடந்தது.

ஒரு குழந்தையை இரண்டு தாய்மார்கள் சொந்தம் கொண்டாடிய வழக்கு ஒன்று, சாலமன் என்ற மன்னனிடம் வந்ததாக பழங்கதை ஒன்று உண்டு. சாலமன், அந்தக் குழந்தையை இரண்டாக வெட்டிக் கொடுக்க உத்திரவிட்டு, அதன் மூலம் அக்குழந்தையின் உண்மையான தாயைக் கண்டுபிடித்தாராம்.

ஜெயாவிற்கும், கருணாநிதிக்கும் இடையே உள்ள இந்த 'வழக்கில்', நாம், மன்னன் சாலமனைப் போலத் தீர்ப்பு வழங்கத் தேவையில்லை. மாறாக, இந்த வழக்கை வேறொரு கோணத்தில் இருந்து அணுக வேண்டியிருக்கிறது. ஃபோர்டும், ஹுண்டாயும் யாருடைய ஆட்சியில் தமிழகத்திற்கு வந்தது என்பதை விட, அந்த நிறுவனங்களால் தமிழகத்திற்குக் கிடைத்த பலன் குறித்துதான் நாம் விசாரணை நடத்த வேண்டியிருக்கிறது.

சென்னைக்கு அருகில் அமெரிக்க நிறுவனமான ஃபோர்டு கார் நிறுவனத்தை அமைப்பதற்காக 400 ஏக்கர் விளைநிலம், அப்பகுதி மக்களிடமிருந்து தமிழக அரசால் கைப்பற்றப்பட்டது; அப்பகுதி மக்கள் அந்த நிலத்திற்கு அருகே மாடு மேய்க்கக் கூட அனுமதிக்கப்படாமல் துரத்தப்பட்டனர். 400 ஏக்கர் பரப்பளவில் பிரம்மாண்டமாக அமைந்திருக்கும் இந்த நிறுவனம், அப்பகுதியைச் சேர்ந்த ஒரு நூறு பேருக்காவது நிரந்தரமான, நேரடி வேலை வாய்ப்பைக் கொடுத்ததா என்றால், அதுவும் கிடையாது.

கருணாநிதி ஆட்சியின் பொழுது தொடங்கப்பட்ட தென் கொரியாவின் ஹுண்டாய் நிறுவனத்திற்குப் பல வரிச் சலுகைகள் தி.மு.க. அரசால் கொடுக்கப்பட்டன. 600 கோடி மூலதனத்தில் தொடங்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 500-ஐக் கூடத் தண்டாது என்கிறது ஒரு புள்ளி விவரம்.

இந்த நிறுவனங்களால் தமிழக அரசிற்கும் எவ்வித இலாபமும் கிடையாது. காலியாகிக் கிடந்த கஜானாவை நிரப்பிக் கொள்ள முதல்வர் ஜெயா, தமிழக மக்களின் மீதுதான் வரிச் சுமையை ஏற்றினாரே தவிர, இந்த நிறுவனங்களின் மீது கை வைக்கவில்லை.

இந்த நிறுவனங்களால் என்னதான் பயன் என்றால், பலவித ''மாடல்களில்''; சொகுசான கார்கள் கிடைத்தன. யாருக்கு?

இந்தியாவில் 1000 பேரில் 7 பேரிடம்தான் சொந்தமாக கார்கள் இருப்பதாக ஒரு புள்ளி விவரம் கூறுகிறது. இந்தப் புள்ளி விவரத்தை அப்படியே தமிழகத்திற்குப் பொருத்தினால், ஒரு மூன்று இலட்சம் பேரின் ஆசையைப் பூர்த்தி செய்யக் கொண்டு வரப்பட்டவைதான் இந்த நிறுவனங்கள்.

புதிய பொருளாதாரக் கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு இந்தியாவில் நுழைந்துள்ள கார் தயாரிக்கும் நிறுவனங்களின் வளர்ச்சிதான், மற்ற தொழில் துறைகளைக் காட்டிலும் 'ஓஹோ'வென்று இருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் கார் உற்பத்தியின் வளர்ச்சி 20 சதவீதத்தில் இருந்து 30 சதவீதம் வரை வளர்ந்து கொண்டே செல்வதாகக் கூறுகிறார்கள். ஆனால், இந்த வளர்ச்சி இந்தியப் பொருளாதாரத்தின் மீது சுமையாக மாறியிருக்கிறது; அரசின் வரி வருமானத்தைத் தின்று கொழுக்கும் ஒட்டுண்ணியாக மாறியிருக்கிறது.

தனியார் கார் நிறுவனங்களைப் பொருத்தவரை அரசாங்கம் என்பது கார் விற்பனையைத் தூக்கி நிறுத்தும் ஒரு ''ஜாக்கி''. கார் மற்றும் அதன் உதிரி பாகங்கள் மீது விதிக்கப்படும் பல்வேறு விதமான வரிகள் மற்றும் தீர்வைகளை ஒவ்வொரு ஆண்டு பட்ஜெட்டிலும் படிப்படியாகக் குறைப்பதன் மூலம், தனியார் கார் நிறுவன முதலாளிகளின் இலாபம் சரிந்துவிடாமல் பார்த்துக் கொள்கிறது, அரசாங்கம். கடந்த பட்ஜெட்டில் மட்டும், காரின் மீது விதிக்கப்படும் கலால் தீர்வை 8 சதவீதம் - 24 சதவீதத்தில் இருந்து 16 சதவீதமாக - குறைக்கப்பட்டது.

கார் நிறுவன முதலாளிகளோ இந்தச் சலுகையோடு திருப்தியடையாமல், காரின் மீது மாநில அரசுகள் விதிக்கும் சாலைவரி, பதிவுக் கட்டணம் ஆகிய வற்றையும் குறைக்க வேண்டும் எனப் பேரம் நடத்துகிறார்கள். பிரதமர் மன்மோகன் சிங்கின் வலதுகரமாகவும், திட்ட கமிசனின் துணைத் தலைவராகவும் இருக்கும் மாண்டேக்சிங் அலுவாலியா, ''கார் உற்பத்தி மீது விதிக்கப்படும் பல்வேறு விதமான வரிகளைத் தீவிரமாகச் சீர்திருத்த வேண்டும்'' எனக் குரல் கொடுத்து, கார் நிறுவன முதலாளிகளுக்காகத் தரகு வேலை பார்க்கிறார்.

பட்ஜெட் பற்றாக்குறையைக் காட்டி, அரிசிக்கும், கோதுமைக்கும், மண்ணெண்ணெய்க்கும், சமையல் எரிவாயுவுக்கும் தரும் 'மானியத்தை'ப் படிப்படியாக வெட்டி வரும் ஆளும் கும்பல், கார் நிறுவன முதலாளிகளுக்கு வரி குறைப்பு என்ற

கார் கண்காட்சியில் நவீன சொகுசு காரைப் பார்த்து பரவசமடையும் பக்தர்கள் கூட்டம்.





படிப்பகம்

போர்வையில் மானியத்தை வாரிக் கொடுக்கிறது. இதனால்தான், கடந்த பத்தாண்டுகளில், அத்தியாவசிய உண வுப் பொருட்களின் விலை 140 சதவீ தம் அதிகரித்தபொழுது, ஆடம்பர கார் களின் விலை சரிந்து கொண்டே போனது.

இது ஒருபுறமிருக்க, அரசாங்கம் கார் நிறுவனங்களின் மறைமுகமான விற்பனை பிரதிநிதியாகவும் இயங்கி வருகிறது. பொதுத்துறை வங்கிகளில் கார் வாங்கக் கடன் வாங்குவது, கடை யில் போய் மிட்டாய் வாங்குவது போல எளிதாகி விட்டது. சிறு தொழில் தொடங்கவோ, விவசாயத்திற்கோ, படிப்புச் செலவுக்கோ கடன் வாங்க நாயாய் அலைய வேண்டியதுபோல காருக்கு கடன் வாங்க அலைய வேண் டிய தேவையே கிடையாது. பிரபல மான பல வங்கிகள் கார் வாங்கக் கடன் கொடுப்பதற்காகவே பல தனியார் ஏஜென்சிகளை நடத்தி வருகின்றன.

பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடந்த பொழுது, விவசாயத் துறை அமைச்ச ராக இருந்த அஜீத் சிங், ''நகர்ப்புற மேட் டுக் குடியினர் கார் வாங்குவதற்கு வங் கிகளில் பெறும் கடனுக்கு 8.25 சதவீ தம்தான் வட்டி. ஆனால் கிராமப்புற விவசாயிகள் டிராக்டர் வாங்குவதற்குப் பெறும் கடனுக்கு 14 சதவீத வட்டி வசூ லிக்கப்படுகிறது. இக்கடனைப் பெற விவசாயிகள் நிலத்தை அடமானம் வைத்து, வில்லங்கச் சான்றிதழும் கொடுக்க வேண்டியுள்ளது'' எனப் பகி ரங்கமாகவே பொதுத்துறை வங்கிக ளின் கார் கடன் சேவையை அம்பலப்ப டுத்தினார். ஊரான் வீட்டு நெய்யே என் பொண்டாட்டி கையே என்பார்களே, அந்தத் தாராளம் தான் கார் விற்பனை யைத் தூக்கி நிறுத்தி வருகிறது.

ஆறேழு ஆண்டுகளுக்கு முன்பு, தில்லி நகரின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது என்ற பெயரில், அந்நக ரில் பெட்ரோல் / டீசலில் ஓடும் ஆட் டோக்கள், பேருந்துகளை, இயற்கை எரிவாயுவின் கீழ் ஓடுவதாக மாற்ற வேண்டும் என அதிரடியாக நீதிமன்றம் உத்திரவிட்டது. இந்தத் தீர்ப்பு தில்லி நக ரின் சுற்றுப்புறச்சூழலைத் தூய்மையான தாக மாற்ற உதவியதைவிட, பேருந்து மற்றும் ஆட்டோ தயாரிக்கும் நிறுவ னங்களின் (டாடா, பஜாஜ், அசோக் லேலண்டு) விற்பனை உயர்வ தற்குத்தான் நன்றாக உதவியது. மேலும், தில்லி போன்றே எல்லா பெரு நகரங்களிலும் உத்திரவிட வேண்டும் என கார் தயாரிப்பாளர்கள் சுற்றுப்புறச் சூழலைக் காட்டித் தங்களின் விற்ப னையை உயர்த்திக் கொள்ளத் திட்டம்



நவீன சொகுசுக் கார்கள் வழுக்கிச் செல்வதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள மும்பய் - புனா அதிவிரைவுச் சாலை.

போட்டார்கள்.

அழகான, சொகுசான கார்களை விட, பொதுச் சேவையில் ஈடுபடும் பேருந்து, ஆட்டோ, லாரி போன்ற வாகனங்களால்தான் சுற்றுப்புறச் சூழல் மாசு படுவதாக ஒரு பொய்ப் பிரச்சாரம் முதலாளித்துவப் பத்திரிகைகளால் நடத்தப்படுகிறது. ஆனால், உண்மை இதற்கு நேர் எதிரானது.

ஒரு பேருந்தில் பயணம் செய்யும் பயணிகளின் எண்ணிக்கையையும்; ஒரு காரில் பயணம் செய்யும் நபர்க ளின் எண்ணிக்கையையும் எடுத்துக் கொண்டு ஒப்பிட்டால், பேருந்தைவிட கார் சுற்றுப்புறச் சூழலை இரண்டு மடங்கு அதிகமாக மாசுபடுத்துகிறது; ஆட்டோவைவிட, ஆறில் இருந்து எட்டு மடங்கு அதிகமாக சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்துகிறது.

குறிப்பாக, திடீர்ப் பணக்கார அரசி யல்வாதிகளாலும் புதுப்பணக்கார கும் பலாலும் வாங்கப்படும் டாடா சுமோ, டாடா சஃபாரி, ஸ்கார்பியோ போன்ற டீசலில் ஓடும் ''ஸ்போர்ட்ஸ்'' மாடல் கார்கள், மற்ற ரக கார்களை விட அதி கம் சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்துவ தால், ''இந்த கார்களின் விற்பனையைத் தடை செய்ய வேண்டும்'' என தில்லி யைச் சேர்ந்த அறிவியல் மற்றும் சுற்றுப் புறச் சூழலுக்கான மையம் வாதிடுகி றது.

உலக வங்கி 1992-ஆம் ஆண்டு தயாரித்த அறிக்கையில், ''காற்றை மாசு படுத்துவதில், வாகனப் போக்குவரத் தின் பங்கு 60 சதவீதமாகும். இந்தக் காற்று மாசுபாட்டால் இந்தியாவில் வரு டத்திற்கு 40,000 அகால மரணங்கள் ஏற்படுகின்றன. காற்று மாசுபாட்டினால் ஏற்படும் நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கு மட்டும், இந்திய அரசு வருடமொன்றுக்கு 4,500 கோடி ரூபாய் செலவழிக்க வேண்டும்'' என மதிப்பிட்டுள்ளது. இதன்படி பார்த் தால், இத்தொகையில் கணிசமான பங்கை கார் நிறுவனங்களிடமிருந்தும், கார் சொந்தக்காரர்களிடமிருந்தும் வசூ லிக்க வேண்டும்.

தில்லி யூனியன் பிரதேச அரசு, சொந்த பயன்பாட்டுக்காக டீசல் கார் களை வாங்குபவர்கள் மீது 2% கூடுதல் வரி விதித்தது. இந்த வரி விதிப்பானது, சுற்றுப்புறச் சூழல் பாதிப்பை மனதிற் கொண்டு விதிக்கப்பட்டதாக அதன் பட் ஜெட்டில் கூறப்பட்டது. ஆனால், டாடா இண்டிகா கார் நிறுவன முதலாளி ரத் தன் டாடா தலைமையில் திரண்ட கார் நிறுவன முதலாளிகள் தில்லி முதல்வர் ஷீலா தீட்சித்தைச் சந்தித்து, இரகசிய பேரம் நடத்தி, இந்த வரி விதிப்பை ஒழித்துக் கட்டிவிட்டனர்.

பணக்கார வர்க்கத்தின் ஆடம்பரத் திற்காகவும், சொகுசிற்காகவும் ஓடும் கார்கள், சுற்றுப்புறச் சூழலில் ஏற்படுத் தும் பாதிப்பைச் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது.

ஒரு பேருந்தில் நின்று கொண்டே பயணம் செய்பவர்களையும் சேர்த் தால், அதிகபட்சமாக 80 பேர் பயணம் செய்ய முடியும்; ஆனால், ஒரு பேருந் தின் நீள - அகலத்தில் பாதியளவு கொண்ட ஒரு காரில், மிஞ்சிப் போனால் ஐந்தாறு பேர் தான் பயணம் செய்ய முடியும். பல நேரங்களில் காரின் முன்னிருக்கையில் அதன் ஓட்டு நர் - பின்னிருக்கையில் அதன் முத லாளி என்ற இரண்டு பேரைத் தவிர, வேறு யாரும் செல்வதில்லை.

80 பேர் பயணம் செய்யும் பேருந்து சாலையில் எடுத்துக் கொள்ளும் இடத்தை, இரண்டு கார்கள் ஆக்கிரமித் துக் கொள்கின்றன. கார்களின் இந்த

www.padippakam.com

ஆக்கிரமிப்புதான் போக்குவரத்து நெரிசலுக்குப் பிரதான காரணமாக அமைகிறது. அரசுப் பேருந்தின் சேவையை அதிகப்படுத்தி, சொந்த உபயோகத்திற்கு ஓடும் கார்களின் போக்குவரத்தைக் குறைத்தால்தான் இந்தப் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த முடியும்.

ஆனால், அரசோ, அரசுப் பேருந்து சேவையைக் குறைத்து, கார் மற்றும் இரு சக்கர வாகனங்களின் போக்குவரத்தை அதிகப்படுத்துகிறது. இந்தத் தலைகீழான கொள்கை மூலம், அவற்றின் விற்பனைக்கு மறைமுகமாக உதவுகிறது. மேலும், போக்குவரத்து நெரிசலைக் குறைப்பது என்ற பெயரில் பாலங்கள், நான்கு வழி விரைவுச் சாலைகளைக் கட்டி, அவற்றைத் தனியார் வசம் ஒப்படைத்து, பொதுமக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தி வருகிறது.

மும்பையில் உள்ள நாரிமன் முனை என்ற பகுதியில் ஒரு சதுர அடி நிலத்தின் மதிப்பு ஒரு இலட்ச ரூபாய். ஆனால், இங்கு (தனியாரின்) கார்களை நிறுத்துவதற்கு ரூ. 1250/- மட்டுமே மாத வாடகையாக வசூலிக்கப்படுகிறது. தில்லியிலும், சென்னையிலும், பிரதான சாலைகளில் கார்களை நிறுத்துவதற்கு இரண்டு மணி நேரக் கட்டணம் ரூ. 10-க்கு அதிகமில்லை. ''டூரிஸ்ட் டாக்சிகளும்'', ''கால் டாக்சிகளும்'' போக்குவரத்து குறைவான சாலைகளை எவ்விதக் கட்டணமும் இன்றி, நிறுத்தங்களாகப் பயன்படுத்திக் கொள்கின்றன. வேலையில்லாதவர்கள் பிழைப்புக்காக சாலைகளில் கடைகள் போட்டால், அது ஆக்கிரமிப்பு எனக் குற்றஞ் சுமத்தப்பட்டு அப்புறப்படுத்தப்படுகிறது. ஆனால், (தனியார்) கார்களின் ஆக்கிரமிப்புக்கு அரசாங்கமே மானியம் தருகிறது.

''கார் விற்பனையின் மீது விதிக்கப்படும் வரிகளையும், தீர்வைகளையும் அதிகப்படுத்த வேண்டும்; சாலை வரிகள், கார் நிறுத்தக் கட்டணங்களை அதிகபட்சமாகக் கூட்ட வேண்டும்; சொந்த உபயோகத்திற்காக ஓடும் கார்களின் போக்குவரத்திற்குக் கட்டுப்பாடு விதிக்க வேண்டும்; ஒரு காருக்கு மேல் சொந்தமாக வைத்திருப்பவர்கள் மீது அதிக வரி விதிக்க வேண்டும்'' என மைய அரசின் சாலை போக்குவரத்துத் துறையே அரசுக்கு ஆலோசனைகளை வழங்கியிருக்கிறது. ஆனால், பூனைக்கு மணி கட்ட எந்த ஓட்டுக்கட்சி தயாராக உள்ளது?

● செல்வம்

### கொங்குரார் ஸ்பின்னர்ஸ்:

# முதலாளியின் பகற்கொள்ளை தொழிலாளர்களின் போர்க்கோலம்

என்னை ஆட்டவோ அசைக்கவோ முடியாது என்று இறுமாந்திருந்த கொங்குரார் ஸ்பின்னர்ஸ் ஆலை முதலாளி பாலசுப்பிரமணியத்தைப் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் தமது உறுதியான போராட்டத்தின் மூலம் மீண்டும் எச்சரித்துள்ளனர். கோவை மாவட்டம், உடுமலை வட்டம் பெதப்பம்பட்டியிலுள்ள கொங்குரார் ஸ்பின்னர்ஸ் ஆலை நிர்வாகம், விருப்ப ஓய்வுத் திட்டத்தின் கீழ் வெளியேற்றிய 240 தொழிலாளர்களுக்குச் சேர வேண்டிய பல கோடி ரூபாய்களை விழுங்கி ஏப்பம் விட்டுள்ளதையும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் இதற்கெதிராகப் போராடி வருவதையும் பற்றி ஏற்கெனவே பு.ஜ. இதழில் (செப்.'04) செய்தி வெளி வந்துள்ளது. தொழிலாளர்களின் வயிற்றிலடித்தது மட்டுமின்றி, வரிஏய்ப்பு, வங்கிக் கடன் ஏய்ப்புகள் எனப் பல வழக்குகளில் ஆலை நிர்வாகம் சிக்கிக் கொண்டுள்ளது. இதனடிப்படையில் கடந்த செப்டம்பரில் ஆலையை மூடி, ஆலையிலுள்ள இயந்திரங்களை வங்கிகளும் அரசாங்க நிறுவனங்களும் ''சீல்'' வைத்துள்ளன. அவற்றை ஏலமிடுவதெனத் தீர்மானித்துத் தேதி (18.11.04- ஆம் தேதி) அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில் முதலாளி பாலசுப்பிரமணியம் தனது அடியாட்படையோடு நவம்பர் 15-ஆம் தேதி நள்ளிரவில் ஆலைக்குள் நுழைந்து பல லட்ச ரூபாய் மதிப்புள்ள இயந்திரங்களையும் உதிரிப் பாகங்களையும் கச்சாப் பொருட்களையும் கடத்திச் சென்று விட்டான். இச்சட்ட விரோத கிரிமினல் குற்றத்தில் ஈடுபட்ட முதலாளித்துவ கொள்ளைக் கூட்டத்தைக் கைது செய்து, சொத்துக்களைப் பறிமுதல் செய்யுமாறு தொழிலாளர்கள் போலீசிடம் புகார் கொடுத்தும்கூட, எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. முதலாளியின் ஏவல் நாயாகவே போலீசு செயல்பட்டது.

இதுநாள் வரை உண்ணாவிரதம், மனு கொடுப்பது என்ற வரம்போடு போராடி வந்த தொழிலாளர்கள், வெகுண்டெழுந்து சாலை மறியல் போராட்டத்தை அறிவித்தனர். பீதியடைந்த போலீசு ஆலையில் நடந்த கொள்ளை பற்றிய புகாரைப் பதிவு செய்வதாகக் கூறி, போராட்டத்தைக் கைவிடக் கெஞ்சியது. ஆனால், இதுநாள் வரை புகாரைக் கூடப் பதிவு செய்யாமல், தொழிலாளர் தலைவர்களை இழிவுபடுத்திய போலீசாருக்கு எதிராக முழக்கமிட்டபடியே பெதப்பம்பட்டி நால்ரோட்டில் 22.12.04 அன்று தொழிலாளர்கள் சாலைமறியலில் ஈடுபட்டனர். உடுமலை, பொள்ளாச்சி போலீசு துணை கண்காணிப்பாளர்கள் தலைமையில் பெரும் படையாக போலீசு குவிக்கப்பட்ட போதிலும், பெண்கள் உள்ளிட்ட தொழிலாளர்கள் உறுதியாக போராட்டத்தைத் தொடர்ந்தனர். ''இயந்திரங்கள் களவு போகவில்லை; வெறும் வதந்தி'' என்று நம்ப வைக்க முயற்சித்த போலீசு அதிகாரிகளை, பெண் தொழிலாளர்கள் 'இப்போதே ஆலைக்குள் சென்று பார்க்கலாம்; வாருங்கள்' என்று அழைத்துச் சென்று காட்டினர். மூக்கறுபட்ட போலீசு, ஒரு வாரத்திற்குள் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து போராட்டத்தைக் கைவிடக் கோரியது. இதை ஏற்று போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைத்துள்ள தொழிலாளர்கள், நடவடிக்கை எடுக்காவிடில் பகுதிவாழ் மக்களைத் திரட்டி அடுத்த கட்டப் போராட்டத்தைத் தொடருவோம் என்று எச்சரித்துள்ளனர்.



●



படிப்பகம்

www.padippakam.com

## உக்ரைன்:

# அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு தேர்தலும் ஆயுதம்


கள்ள ஓட்டுப் போடுவது; தேர்தலின் பொழுது, ஓட்டுக் கட்சிகள் ரவுடிகளோடு கூட்டு வைத்துக் கொண்டு நடத்தும் வன்முறைகள்; ஆளுங்கட்சி அரசு இயந்திரத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்துவது - இந்த மூன்றையும் ஒழித்துக் கட்டிவிட்டால், தேர்தலை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்திவிட முடியும் எனத் தேர்தல் சீர்திருத்தவாதிகள் கூறி வருகிறார்கள். இந்த மூன்றையும்விட, மிகப் பெரிய அச்சுறுத்தல் இப்பொழுது எழுந்திருக்கிறது. பிற நாடுகளில் நடைபெறும் தேர்தல்களில் அமெரிக்கா மூக்கை நுழைக்கத் தொடங்கியிருப்பதுதான் இந்த அச்சுறுத்தல். ரசியாவின் எல்லையையொட்டி அமைந்துள்ள உக்ரைன் நாட்டில் சமீபத்தில் நடந்த அதிபர் தேர்தலின் அனுபவத்தை வைத்துப் பார்க்கும் பொழுது, இனி எந்தவொரு நாட்டிலும் அமெரிக்காவின் தலையீடின்றித் தேர்தலை நடத்த முடியுமா என்ற சந்தேகத்தை எழுப்புவது தவிர்க்க முடியாததாகிவிட்டது.

உக்ரைனில் நவம்பர் 21-ஆம் தேதி நடந்த அதிபர் தேர்தலில் தற்பொழுது அந்நாட்டில் பிரதமராக இருக்கும் விக்டர் யானுகோவிச்சும்; அவரை எதிர்த்து விக்டர் யுஷ்சென் கோவும் போட்டியிட்டனர். இத்தேர்தலில், விக்டர் யானுகோவிச், எதிர்த்தரப்பு வேட்பாளரைவிட 3 சதவீத ஓட்டுக்கள் அதிகம் பெற்று, வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது. ஆனால், இத்தேர்தலில் முறைகேடுகள் நடந்திருப்பதாகக் குற்றஞ்சுமத்திய எதிர்த்தரப்பு, விக்டர் யானுகோவிச்சின் வெற்றியை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டது.

எதிர்க்கட்சி வேட்பாளராக நின்ற விக்டர் யுஷ்சென்கோவை ஆதரித்தும், தேர்தல் முடிவை எதிர்த்தும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன. ''போரா'' என்ற இளைஞர் அமைப்பும், உக்ரைன் தேசிய பாதுகாப்பு படை என்ற நவீன நாஜி அமைப்பும் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்ட இந்த ஆர்ப்பாட்டங்களின் பொழுது, அரசு அலுவலகங்கள் முற்றுகையிடப்பட்டன; உக்ரைன் அதிபர் லியோனிட் குச்சுமாவும், அதிபர் தேர்தலில் வென்றதாக அறிவிக்கப்பட்ட விக்டர் யானுகோவிச்சும் தங்களின் அலுவலகத்திற்குள்ளேயே நுழைய முடியாதவாறு ''கெரோ'' செய்யப்பட்டனர். ஏறத்தாழ, 16 நாட்கள் நடந்த இந்த ஆர்ப்பாட்டங்களின் முடிவில், அந்நாட்டு உச்சநீதி மன்றம் ஏற்கெனவே நடைபெற்ற அதிபர் தேர்தலைச் செல்லாது என அறிவித்துவிட்டு, புதிய அதிபர் தேர்தலை டிச. 26 அன்று நடத்த உத்திரவிட்டுள்ளது.

உக்ரைன் அதிபர் தேர்தல், அந்நாட்டு உள்நாட்டு விவகாரம் போல் நடைபெறவில்லை. மாறாக, ரசியாவிற்கும், அமெரிக்காவிற்கும் இடையேயான நிழல் யுத்தமாக நடைபெற்றது. விக்டர் யானுகோவிச்சை ரசியாவும்; எதிர்த்தரப்பு வேட்பாளர் விக்டர் யுஷ்சென்கோவை அமெரிக்காவும், ஐரோப்பிய யூனியன் நாடுகளும் வெளிப்படையாகவே ஆதரித்தன.

1991-இல் சோவியத் ஒன்றியம் சிதைந்த பிறகு, உக்ரைன் தனி நாடாக உருவானது. எனினும், ரசியா, முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளின் மீது தனது செல்வாக்கைத் தக்க வைத்துக் கொள்ள உருவாக்கிய ''பொது சுதந்திர அரசுகள்'' என்ற அமைப்பில் உக்ரைனும் உறுப்பு நாடாக இருந்து வருகிறது. ரசியா, உக்ரைனின் எரிசக்தித் துறை, தகவல் - தொழில்நுட்பத் துறை, கன ரகத் தொழில்களில் முதலீடு செய்திருப்பதோடு, உக்ரைன், பைலோ ருசியா, கசகஸ்தான் ஆகிய நாடுகளைத் தன்னுடன் இணைத்து வட்டாரப் பொருளாதார வளையத்தையும் உருவாக்கியிருக்கிறது. மேலும், ரசியாவின் தெற்கு கப்பற்படை தளம் உக்ரைனின் செவஸ்த்பூல் துறைமுகத்தில் அமைந்திருக்கிறது. உக்ரைனில் தனது செல்வாக்குக் குறைந்தால், கருங்கடல் பகுதியில் அமெரிக்காவின் ஆதிக்கம் அதிகரித்து விடும் என அஞ்சுகிறது, ரசியா.




அமெரிக்காவைப் பொருத்தவரை, சோவியத் ஒன்றியத்தில் இருந்து பிரிந்து போன நாடுகளையும்; சோவியத் ஒன்றியம் உருவாக்கியிருந்த ''வார்சா'' இராணுவ ஒப்பந்தத்தில் இணைந்திருந்த கிழக்கு ஐரோப்பிய நாடுகளையும் தனது செல்வாக்கின் கீழ் கொண்டு வந்து, ரசியாவைச் சுற்றி வளைப்பதுதான் அதனின் (அமெரிக்காவின்) திட்டம். இந்த நோக்கத்தோடுதான், அமெரிக்காவின் தலைமையில் உள்ள வட அட்லாண்டிக் இராணுவ ஒப்பந்த கூட்டமைப்பில் (நேடோ), முன்பு ரசியாவின் அணியில் இருந்த போலந்து, ஹங்கேரி, செக் குடியரசு நாடுகள் ஐந்தாண்டுகளுக்கு முன்பே இணைத்துக் கொள்ளப்பட்டன; பல்கேரியா, ருமேனியா, ஸ்லோவேகியா மற்றும் பால்டிக் குடியரசு நாடுகள் இந்த ஆண்டில் ''நேடோ''வில் இணைய அனுமதிக்கப்பட்டுள்ளன.

மேலும், ''தீவிரவாதத்துக்கு எதிரான போரை'' அமெரிக்கா தொடங்கிய பின், முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளான தாஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், கிர்கிஸ்தானில் அமெரிக்காவின் இராணுவத் தளங்கள் அமைக்கப்பட்டுவிட்டன; இந்நாடுகளை ஒட்டி அமைந்துள்ள கருங்கடல் பகுதியில் கிடைக்கும் கச்சா எண்ணெயை எடுப்பதற்காக, இந்நாடுகளோடு அமெரிக்கா பொருளாதார ஒப்பந்தங்களும் போட்டுள்ளது. ஜார்ஜியா, அஜர்பெய்சான் நாடுகளோடும் அமெரிக்கா இராணுவ - பொருளாதார ஒப்பந்தங்களைச் செய்து கொண்டிருக்கிறது.

முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகளில் அமெரிக்காவுக்கும் ரசியாவிற்கும் இடையே நடந்துவரும் இந்த செல்வாக்கு மண்டலப் போட்டியின் குவிமையமாக உக்ரைன் இருக்கிறது.



படிப்பகம்

www.padippakam.com



**அதிபர் தேர்தலில் ஆளுங்கட்சி சார்பில் போட்டியிட்ட விக்டர் யானுகோவிச்சிற்கு (வலது) ஆதரவு தெரிவிக்கும் ரசிய அதிபர் விளாதிமிர் புடின் (நடுவில்).**

''புதிய அமெரிக்க நூற்றாண்டுக்கான திட்டம்'' என்ற அமெரிக்காவின் மேலாதிக்கத் திட்டத்தை ஆதரிக்கும் ''ஹெரிடேஜ் பவுண்டேஷன்'' என்ற அமெரிக்க அமைப்பு, ''உக்ரைனை நமது பக்கம் வென்றுவிட்டால், முன்னாள் சோவியத் ஒன்றிய நாடுகள் அனைத்திலும் அரண்மனை புரட்சியினை நடத்தி விடலாம்'' என்ற மேலாதிக்கக் கனவில் மிதக்கிறது.

எதிர்க்கட்சி வேட்பாளராக நின்ற யுஷ்சென்கோ, அமெரிக்காவின் திட்டத்தையே - உக்ரைனை ''நேட்டோ'' விலும், ஐரோப்பிய யூனியனிலும் இணைப்பது - தேர்தல் வாக்குறுதியாக அளித்துப் பிரச்சாரம் நடத்தினார். இவருடைய பிரச்சாரத்திற்காக, அமெரிக்காவைச் சேர்ந்த ஃப்ரீடம் ஹவுஸ், சோராஸ் பவுண்டேஷன், ஜனநாயகத்திற்கான தேசிய அறக்கட்டளை உள்ளிட்ட பல ஏகாதிபத்திய கொடை நிறுவனங்கள் ஏறத்தாழ 300 கோடி ரூபாய்களை அள்ளி வீசின. கல்லூரி மாணவர்களை யுஷ்சென்கோவின் ஆதரவாளராக மாற்றுவதற்கு, ஐரோப்பிய நாடுகளின் ஆதரவோடு ''போரா'' என்ற இளைஞர் அமைப்பு உருவாக்கப் பட்டது. தேர்தல் நடவடிக்கைகளைக் கண்காணிப்பது என்ற பெயரில், அமெரிக்க ஆதரவு பெற்ற அரசு சாரா நிறுவனங்கள் உக்ரைனில் இறக்கிவிடப்பட்டன. மேற்குலகப் பத்திரிகைகளின் தயவில் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டு, மக்களின் ஆதரவு யுஷ்செனகோவிற்கே இருப்பதாகப் பிரச்சாரம் செய்யப்பட்டது.

இந்தத் தலையீடுகளையெல்லாம் மீறி ரசிய ஆதரவு பெற்ற விக்டர் யானுகோவிச் வெற்றி பெற்றவுடன், தேர்தலில் தில்லுமுல்லுகள் நடந்ததாகக் குற்றஞ்சுமத்தி, அமெரிக்க சார்பு எதிர்க்கட்சிகள் தெருப் போராட்டத்தில் குதித்து அரசியல் நெருக்கடியை ஏற்படுத்தின. இந்தப் போராட்டம், மேற்குலகப் பத்திரிகைகளின் மூலம், ஊழல் ஆட்சிக்கு எதிரான ஜனநாயகத்திற்கான கலகமாக விளம்பரப்படுத்தப்பட்டது. உக்ரைன் உச்சநீதி மன்றம் மறு தேர்தலுக்கு உத்திரவிட்டவுடன், அமெரிக்காவும், ஐரோப்பாவும் இந்தப் போராட்டத்திற்கு ''ஆரஞ்சுப் புரட்சி'' எனப் பெயர் சூட்டி விட்டன.

உக்ரைனுக்கு முன்பாகவே ஜியார்ஜியாவிலும் (ரோஜா புரட்சி), செர்பியாவிலும் இப்படிப்பட்ட ''தேர்தல் புரட்சி''களின் மூலம், அந்நாடுகளில் அமெரிக்க அடிவருடிகள் அதிபர்களாக்கப்பட்டுள்ளனர். பிற நாடுகளில் 'ஜனநாயக'த்தைக் கொண்டு வருவதற்காக, ஓட்டுக் கட்சிகளை விலைக்கு வாங்கி வரும் அமெரிக்காவின் சோராஸ் பவுண்டேஷனுக்கு உலகெங்கிலும் 34 நாடுகளில் கிளைகள் உள்ளன. இவற்றுள் 26 கிளைகள், முன்னாள் சோவியத் ஒன்றியத்தையும், கிழக்கு ஐரோப்பாவையும் சேர்ந்த நாடுகளில் அமெரிக்க அடிவருடி ஆட்சியை ஏற்படுத்துவதற்காகவே இயங்கி வருகின்றன.

அமெரிக்காவின், ''ஜனநாயகத்திற்கான தேசிய அறக்கட்டளை'' தான் செக்கோஸ்லோவாகியா நாட்டில் நடந்துவரும் போலி கம்யூனிச ஆட்சியைக் கவிழ்ப்பதற்குப் பண உதவி செய்தது. இதுபோல, ஃபிடல் காஸ்ட்ரோ தலைமையில் கியூபாவில் நடந்து வரும்

**ஜனநாயகத்திற்கு இப்படித்தான் விளக்கம் அளிக்க முடியும்: அமெரிக்க டாலரால், அமெரிக்க குண்டுகளால், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்காக நடத்தப்படும் ஆட்சியே மக்களாட்சி!**

**அமெரிக்காவால் ஆதரிக்கப்பட்ட எதிர்க்கட்சி வேட்பாளர் விக்டர் யுஷ்செனகோ, தேர்தல் முடிவுகளை எதிர்த்து 'கலகத்தில்' இறங்கிய ஆர்ப்பாட்டக்காரர்களை வாழ்த்துகிறார்.**



www.padippakam.com

அமெரிக்க எதிர்ப்பு போலி கம்யூனிச ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு அமெரிக்க அரசு 295 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறது.

அமெரிக்காவால் வெறுக்கப்படும் வெனிசுலா நாட்டு அதிபர் சாவேஸின் 'சர்வாதிகார' ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நடந்த இராணுவப் புரட்சியைத் தூண்டிவிட்டதே அமெரிக்காவின் ''ஜனநாயகத்திற்கான தேசிய அறக்கட்டளை''தான்; இந்த இராணுவப் புரட்சி தோல்வியுற்றதையடுத்து, சாவேஸின் ஆட்சி பற்றி நடந்த பொதுஜன வாக்கெடுப்பில், எதிர்க்கட்சிகளுக்கு நிதி உதவி செய்ததும் இந்த அமைப்புதான் என்பதும் தற்பொழுது அம்பலமாகியிருக்கிறது.

இந்த நாடுகளில் எல்லாம் அமெரிக்க டாலர்களை வீசி ஜனநாயகத்தைக் கொண்டு வர முயலும் அமெரிக்கா, ஈராக்கிலும், ஆப்கானிஸ்தானிலும் அமெரிக்கக் குண்டுகளை வீசி ஜனநாயகத்தைக் கொண்டுவரத் துடிக்கிறது.

இனி, ஜனநாயகத்திற்கு இப்படித்தான் விளக்கம் அளிக்க முடியும்: அமெரிக்க டாலரால், அமெரிக்க குண்டுகளால், அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்காக நடத்தப்படும் ஆட்சியே மக்களாட்சி!

● ரஹீம்

# ''கடனைச் செலுத்த மறுப்போம்! இழந்த சொத்துக்களைப் பறிமுதல் செய்வோம்!''

## – கந்து வட்டிக் கும்பலுக்கு எதிராக வி.வி.மு. ஆர்ப்பாட்டம்

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் பூவந்தி அருகிலுள்ள கீரனூரைச் சேர்ந்த காந்தி - புஷ்பவள்ளி கந்துவட்டி தம்பதியினரால், கீரனூரிலும் சுற்றுப்புற கிராமங்களிலும் ஏராளமான விவசாயிகள் கந்துவட்டிக் கொடுமைக்கு ஆளாகிப் பரிதவிக்கின்றனர். இக்கும்பலால் நித்தம் நித்தம் அவமானப்படுத்தப்பட்டு வதைக்கப்படும் பலர் ஊரை விட்டே ஓடிப்போகின்றனர். கொடுமையையும் நெருக்கடியையும் தாங்க முடியாமல் பல விவசாயக் குடும்பங்கள் தற்கொலைக்குத் தள்ளப்படுகின்றன.

ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்பு கள்ளச் சாராயம் காய்ச்சி விற்ற இச்சமூக விரோதக் கும்பல் ''கலக்குமுட்டி காந்தி'' என்று புகழ் பெற்று, பின்னர் ''கந்துவட்டி காந்தி''யாக உயர்ந்து, ஊர் மக்களின் தாலியறுத்துப் பல இலட்சங்களுக்கும் 40 ஏக்கர் நிலபுலன்களுக்கும் அதிபதியாகி, அடியாட்படையுடன் கொட்டமடித்து வருகிறது. வட்டி கட்ட முடியாத ஏழைகளை அடியாட்களைக் கொண்டு கட்டி வைத்து அடிப்பது, ஆடு - மாடுகளை மேய்த்து வரச் சொல்வது, செருப்பால் அடித்து அவமானப்படுத்துவது, ஏழை விவசாயிகளின் துண்டு - துக்காணி நிலங்களையும், சொத்துக்களையும் எழுதி வாங்கிக் கொண்டு ஊரை விட்டே விரட்டியடிப்பது என வட்டி ராச்சியம் நடத்தி வருகிறது. பாதிக்கப்பட்ட மக்கள் போலீசாரிடம் புகார் செய்தும், மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் வரை மனு கொடுத்தும் கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆளுங்கட்சி செல்வாக்கும் அடியாட்படையுமாக அட்டூழியம் புரிந்து வரும் கந்துவட்டி காந்திக்கு எதிராக எதுவும் செய்ய இயலாமல் கிராம மக்கள் வெதும்பிக் கொண்டிருந்தனர்.

இந்நிலையில் 'யாராலும் தட்டிக் கேட்க முடியாது' என்று கருதப்பட்ட கந்துவட்டி காந்தி கும்பலின் அட்டூழியங்களுக்கு முடிவு கட்ட, இக்கும்பலின் கொட்டம், போலீசின் கைக்கூலித்தனம், ஓட்டுக் கட்சிகளின் பாராமுகம் ஆகியவற்றை அம்பலப்படுத்தி வி.வி.மு. துண்டறிக்கை வெளியிட்டுப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட மக்கள் இவ்வியக்கத்தால் நம்பிக்கையடைந்து, தமது ஆதரவை நல்கினர். வி.வி.மு. தோழர்களை வெட்டுவோம், குத்துவோம் என்று சவடால் அடித்துவந்த காந்தியும் அவனது அடியாட்படையும், மக்களின் பேராதரவுடன் நடந்த வீச்சான பிரச்சாரம் - சுவரொட்டிகளைக் கண்டு பீதியடைந்து பம்மியது.

போர்க்குணமிக்க இப்பிரச்சாரத்தின் முத்தாய்ப்பாக காந்தி - புஷ்பவள்ளி கந்துவட்டிக் கும்பலைக் கைது செய்து தண்டிக்கக் கோரியும், இக்கும்பல் மீது நடவடிக்கை எடுக்காமல் துணை நின்ற போலீசார் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும், கடனைச் செலுத்த மறுத்து, இக்கும்பலிடம் இழந்த சொத்துக்களைப் பறிமுதல் செய்ய உழைக்கும் மக்களுக்கு அறைகூவல் விடுத்தும் 4.10.04 அன்று மேலூர் வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக வி.வி.மு. சார்பில் எழுச்சிமிகு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. கந்துவட்டிக் கும்பலால் பாதிக்கப்பட்டோர் தமக்கு நேர்ந்த அவலங்களை உணர்ச்சியோடு எடுத்துரைத்த இந்த ஆர்ப்பாட்டத்தில் திரளான உழைக்கும் மக்கள் பங்கேற்றனர். கந்துவட்டிக் கொள்ளைக்கு முடிவு கட்டவும், மக்களின் நியாயமான கோரிக்கைகளை வென்று நிலைநாட்டவும், மக்களை அணிதிரட்டி அடுத்தகட்டப் போராட்டத்திற்கு வி.வி.மு. ஆயத்தமாகி வருகிறது.




– விவசாயிகள் விடுதலை முன்னணி, மேலூர் வட்டம்.

www.padippakam.com


# ஊழலை எதிர்த்தால் "துரோகி" பட்டம்!
# - 'மார்க்சிஸ்டு'களின் புதிய ஊழியர் கொள்கை

ஹராதன் ரே - மே.வங்க 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மூத்த ஊழியர். சி.ஐ.டி.யு.வுடன் இணைந்துள்ள இந்திய சுரங்கத் தொழிலாளர் சபை (CMSI)யின் நீண்டகால மூத்த தொழிற்சங்கத் தலைவர். 'மார்க்சிஸ்ட்' கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராகவும், சி.ஐ.டி.யு.வின் பல்வேறு பொறுப்புகளிலும் செயல்பட்டவர். இன்று அவர், கட்சி மற்றும் தொழிற்சங்கத்தின் அனைத்து பொறுப்புகளிலிருந்து நீக்கப்பட்டு, பெட்டி - படுக்கையோடு சங்க அலுவலகத்திலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

அவர் கட்சி விரோத - தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்று குற்றம் சாட்டுகிறது, 'மார்க்சிஸ்டு' கட்சி. காஞ்சி மட சங்கராச்சாரிகளின் ஊழல் - மோசடி, கிரிமினல், காம லீலைகளைத் தனது கடிதங்கள் மூலம் சங்கரராமன் அம்பலப்படுத்தியது போலவே, 'மார்க்சிஸ்ட்' கட்சித் தலைவர்களின் ஊழல் - மோசடி மற்றும் கிரிமினல் மாஃபியாக்களுடனான கூட்டணியை தனது கடிதங்கள் மூலம் அம்பலப்படுத்தியுள்ளார் ஹராதன் ரே. இது தான் அவர் செய்த 'குற்றம்'.

மே.வங்கத்தின் நிலக்கரிச் சுரங்கப் பணிகளில் ஒரு பகுதியை தனியார் ஒப்பந்தக்காரர்களுக்குத் தாரை வார்ப்பதையும், அவர்கள் தொழிலாளர்களுக்கு அற்பக்கூலி கொடுத்து ஏய்ப்பதையும், நிலக்கரி மாஃபியாக்களுடன் கட்சி மற்றும் தொழிற்சங்கத் தலைவர்கள் கூட்டணி கட்டிக் கொண்டுள்ளதையும் கண்டு குமுறிய அவர், பர்துவான் மாவட்ட கட்சித் தலைமைக்கு கடந்த ஓராண்டாகக் கடிதங்கள் எழுதி நடவடிக்கை எடுக்கக் கோரி வந்தார். அதையடுத்து, இத்தனியார்மயத் தாக்குதலுக்கும் ஊழல் கொள்ளைக்கும் எதிராக தொழிலாளர்களைத் திரட்டிப் போராடினார். கட்சித் தலைமையோ நிலக்கரி மாஃபியாக்களுடன் கூட்டணி கட்டிக் கொண்டு இப்போராட்டங்களைச் சீர்குலைத்தது. கட்சி விரோத - தொழிலாளர் விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ரே மீது குற்றம் சாட்டியது. கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் நடப்பதை அறிந்த அவர், தானே கட்சியிலிருந்து வெளியேறுவதாக அறிவித்து, பத்திரிகையாளர்கள் முன்னிலையில் கட்சியின் ஊழல் - மோசடி, தொழிலாளர் விரோதப் போக்குகளை எதிர்த்து தான் எழுதிய கடிதங்களைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளார். இக்கடிதங்களைக் கட்சி ஊழியர்களிடம் சுற்றுக்கு விட்ட குற்றத்துக்காக கட்சித் தலைமை தன்னை மிரட்டியதாகவும் அம்பலப்படுத்தியுள்ளார்.

நிலக்கரி சுரங்கப் பணிகள் தனியாருக்குத் தாரை வார்க்கப்படுவதால் வேலையிழந்த தொழிலாளர்களுக்கு மறுவாழ்வு - நிவாரணம் கோரி ஏற்கெனவே அவர் உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுத்திருந்தார். கட்சி மற்றும் தொழிற்சங்க ஒப்புதலுடன்தான் இந்த வழக்கு தொடுக்கப்பட்டது. இப்போது அவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டதால் கட்சியோ சங்கமோ இந்த வழக்கை நடத்த உதவி செய்யாது என்று கட்சித் தலைமை அறிவித்துள்ளது. இதேபோல, லே-ஆஃப் காரணமாக ஊதியமின்றி, பரிதவித்த 27 பெண் தொழிலாளர் குடும்பங்களுக்கு உதவும் பொருட்டு, சங்க நிதியிலிருந்து தலா ரூ. 1000 வீதம் தர ரே ஏற்பாடு செய்திருந்தார். அவர் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டதால், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு இந்த உதவியைக் கூட கட்சித் தலைமை செய்ய மறுத்துவிட்டது. ரே-வுடன் தொடர்புடைய கட்சி மற்றும் தொழிற்சங்க ஊழியர்கள் தொடர்ந்து அச்சுறுத்தப்பட்டு வருகின்றனர்.



**ஊழலையும் ரவுடித்தனத்தையும் எதிர்த்துப் போராடி உயிர் துறந்தார் மதுரை லீலாவதி; அவரைத் தியாகியாகப் போற்றும் 'மார்க்சிஸ்டு' கட்சியோ - ஊழலை எதிர்க்கும் கட்சி ஊழியர்களையே கட்சியை விட்டு வெளியேற்றுகிறது.**

ஊழலையும் ரவுடித்தனத்தையும் எதிர்த்துப் போராடி உயிர் துறந்தார் மதுரை லீலாவதி; அவரைத் தியாகியாகப் போற்றும் 'மார்க்சிஸ்டு' கட்சியோ - ஊழலை எதிர்க்கும் கட்சி ஊழியர்களையே கட்சியை விட்டு வெளியேற்றுகிறது. "ஒப்பந்தக்காரர்களின் பையிலுள்ள ஊழல் அரசு" என்று 'இடதுமுன்னணி' ஆட்சியைச் சாடினார், திரிபுராவின் முன்னாள் முதல்வரான நிருபன் சக்ரவர்த்தி. அவருக்குப் 'பைத்தியக்காரன்' என்ற பட்டம் கட்டியது 'மார்க்சிஸ்ட்' கட்சி. தனியார்மயமாக்கலையும், மே.வங்க மின்வாரியத்தில் கோயங்கா அடித்த கொள்ளையையும் அம்பலப்படுத்தினார், மே.வங்க மின்துறை அமைச்சரான சங்கர்சென். "உன் ஒரே மகனை குடும்பத்தோடு கொன்று விடுவோம்" என்று ஆட்சியாளர்களே அச்சுறுத்தியதால், 1999-இல் அவர் பதவி விலகி ஒதுங்கி கொண்டார். இவர்கள் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு சி.பி.எம். தலைமை இன்றுவரை பதிலளிக்கவில்லை.

இன்று ஹராதன் ரே, சி.பி.எம். தலைவர்களின் ஊழல்- மோசடிகளை அம்பலப்படுத்தியதற்காக "துரோகி" என்று குற்றம் சாட்டப்பட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். நாளை இன்னும் பல ஊழியர்களுக்கும் இதுபோன்ற பட்டங்கள் அளிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ●

Owned and Published by R. SHANMUGA RAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai - 600 024. Editor: R. SHANMUGA RAJ.
படிப்பகம்

PUTHIYA JANANAYAGAM
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER NO.42648/85
Regn.No.TN/PMG(CCR)/621/03-05

# இதுதான் 'நீதி'!

கன்றை இழந்துவிட்ட பசுவிற்குக் கூட இந்த நாட்டில் நீதி கிடைத்த வரலாறு உண்டு. ஆனால், சாமானிய மக்களுக்கும், நீதிக்கும் இடையே காத தூரம் இருப்பதைத் துலக்கமாக அம்பலப்படுத்தும் படமிது. இவர்கள் அனைவரும் வீரப்பனை 'வேட்டையாடிய' தமிழக, கர்நாடக அதிரடிப் படையினரால் சட்ட விரோதமாகக் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குள்ளான மலைவாழ் மக்கள்.



அதிரடிப் படையினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னையில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்ட பாதிக்கப்பட்ட மலைவாழ் மக்கள்.



அதிரடிப்படை செய்த சித்திரவதையால் நடக்க முடியாதபடி முடமாகிப் போன கரியன், சதாசிவம் கமிசன் நடத்திய விசாரணையில் படுத்தபடி சாட்சியம் அளிக்கிறார். (கோப்புப் படம்)

அதிரடிப் படையினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி சென்னையில் சமீபத்தில் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்ட இவர்கள், ''அதிரடிப் படைத் தங்களை வேட்டையாடியபொழுது, 87 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதையும்; 65 பெண்கள் தொடர்ந்து பல நாட்கள், பல அதிகாரிகளால் பாலியல் பலாத்காரப்படுத்தப்பட்டதையும்; 300 பேர் மிகக் கொடூரமாகச் சித்திரவதை செய்யப்பட்டதையும்; 120 பேர் ''தடா''வின் கீழ் கைது செய்யப்பட்டு 9 ஆண்டுகள் சிறையில் வதைக்கப்பட்டதையும்'' நினைவு கூர்ந்தார்கள். அதிரடிப் படையின் இந்த அட்டூழியங்களை ஆதாரங்களோடு பதிவு செய்துள்ள சதாசிவம் விசாரணை கமிசன், தனது அறிக்கையை தேசிய மனித உரிமை கமிசனிடம் அளித்து ஒரு வருடம் ஓடிவிட்டது. ஆனாலும், இவர்களுக்கு இது நாள் வரையில் நீதி கிடைக்கவில்லை.

ஜெயா கூறுவது போல சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றால், அதிரடிப் படைக்குத் தலைமை தாங்கிய தேவாரம் தொடங்கி குற்றஞ்சாட்டப்பட்டுள்ள போலீசார் அனைவரும் இந்நேரம் கம்பி எண்ணிக் கொண்டிருக்க வேண்டும்; அதிரடிப் படையின் அட்டூழியங்களை விசாரித்துத் தண்டிக்கத் தனி நீதிமன்றம் அமைத்திருக்க வேண்டும். ஆனால், பாசிச ஜெயாவோ, கூலிக்குக் கொலை செய்யும் தாதாக்களுக்குப் பணம் கொடுப்பதைப் போல, மலைவாழ் மக்களைப் பாலியல் பலாத்காரப் படுத்திய, சித்திரவதை செய்த, சுட்டுக் கொன்ற அதிரடிப் படைக்குப் பாராட்டு விழா நடத்தி, பல கோடி ரூபாய் பெறுமான பரிசுகளை வாரி வழங்கினார்.

கொலைக் குற்றம் சுமத்தப்பட்டுள்ள ஜெயேந்திரனின் மனித உரிமை பற்றி பார்ப்பன பா.ஜ.க., மட்டுமல்ல, மைய அரசும், உச்சநீதி மன்றமும் கவலை கொள்கின்றன; சங்கரராமன் கொலையில் சம்மந்தப்பட்டுள்ள கிரிமினல் தாதா அப்பு, அரசு விருந்தினர் போல தமிழக போலீசால் நடத்தப்படுகின்றான். ஆனால் இம்மலைவாழ் மக்களோ, எவ்வித விசாரணையும் இன்றிக் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டு விட்டனர். இந்திய ஜனநாயகத்தில் இதற்குப் பெயர்தான் ''நீதி''!